ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

191. நாட்டுத் தம்பியும், காட்டுத்தம்பியும்.

கோசல நாட்டைத் தாண்டித் தெற்கு நோக்கிய பரதன், ஒரு காலத்தில் செழிப்புற்றிருந்த வயல்களையும், பிரசித்தி பெற்றிருந்த வனங்களையும் வனப்புகளையும் பார்த்துக் கொண்டே வந்தான். "அவை பாழடைந்து கிடக்கின்றனவே." என்று அதைக் குறித்து அவன் இப்போது துயரப்படவில்லை. "அண்ணன் காட்டுக்குப் போய் விட்டானே!" என்ற ஒரே துயரம் தான்; "அவனை எப்படியாவது நாட்டுக்குக் கொண்டு வந்து. சக்ரவர்த்தியாக்கி விடவேண்டும்" என்ற ஒரே கவலை தான், ஆத்திரம் தான்.

பரதன் தலைவலி

இந்நிலையில் பரதனைக் கண்டு இரங்காதவர் இல்லை. நாட்டு மக்களைப் போல், எதிரே இவனைச் சந்தித்தவர்களும் பெரிதும் இரங்கினார்கள், உருகிப் போனார்கள். பகுத்தறிவில்லாத பிராணிகளும் கூட அந்தத் துயரத்தைக் கண்டு இரங்கியது போலத் தோன்றியது. ஏன், மரங்களும் செடி கொடிகளும் கூட இவனுடைய பெருந் துயரத்தால் பாதிக்கப்பட்டவை போல் வாடிப் போயிருந்தன.

இப்படி வழியெல்லாம் தன் துயரத்தை அனுதாபத்துடன் பகிர்ந்து கொண்ட 'சமதுக்கி' களைச் சந்தித்த வண்ணம் கங்கையாற்றங்கரையை அடைந்தான் பரதன். இதற்கு முன் ராமன் தம்பியுடனும் மனைவியுடனும் வந்து சேர்ந்து முனிவர்களையும் குகனையும் சந்தித்த அதே கங்கைக் கரை தான். ஆனால் முடியிழந்த ராமன் எவ்வளவு குதூகலமாக வந்தான்! லிவிங்ஸ்டன் என்ற யாத்திரிகன் தான் கொண்டுபோன பொருளை இழந்ததும், "எங்கள் மூட்டையின் கனம் மிகவும் குறைந்து போனதால், மறுநாள் யாத்திரை முன்னிலும் இன்பமாக இருந்தது!" என்று ஊருக்குச் செய்தி அனுப்பினாறும்: அத்தகைய மனநிலையோடு, ராமன் முடி துறந்து "தலைச்சுமை போயிற்று!" என்று கருதியதுபோல் கங்கைக் கரையை வந்தடைந்தான்.

அதற்கு முற்றும் மாறான "தலைவலி" பரதனுக்கு இப்போது:

பூவிரி பொலன்கழல்
புனைவில் தானையான்
காவிரி நா(டு)அன
கழனி நா(டு)ஒரீஇக்,
தாவர சங்கமம்
என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக்
கங்கை எய்தினான்.

[பூவிரி பொலன் கழல் – பூவேலை செய்த அழகிய வீரக்கழல். புனைவில் – அணிந்து கொள்ளாத. தானையான் – சேனையை உடைய பரதன். காவிரி நாடு அன – காவிரி பாயும் சோழ நாட்டை ஒத்த. கழனி நாடு – வயல் வளம் கொண்ட நாடு. ஒரீஇ – நீங்கி. தாவரம் – நிலை நிற்கும் மரங்கள் முதலியன. சங்கமம் – நடந்து திரியும் பிராணி வர்க்கம். தன்மைய – தன்மை வாய்ந்தவை. எய்தினான் – அடைந்தான்.]

சக்கரவர்த்தியும் படைவீரர்களும் படைத் தலைவர்களும் தத்தம் பதவிகளுக்குத் தக்கபடி வீரக்கழல்கள் அணிந்து கொள்வது பழைய வழக்கம். தசரத சக்ரவர்த்தியைக் கவிஞன் அயோத்தியா காண்ட முகப்பில்,

பூவிரி பொலன்கழல்
பொருவில் தானையான்

[பொருவில் – ஒப்பற்ற.]

என்று குறிப்பிடுகிறான். அதே சொற்றொடரைச் சிறிது மாற்றி, "சக்கரவர்த்தி பதவி எனக்கு வேண்டியதில்லை" என்று வரும் பரதனுக்கும் உபயோகிக்கிறான். வீரக் கழலைப் பரதனும் அணிந்து கொள்ளவில்லை, படை வீரர்களும் தரித்துக் கொள்ளவில்லை. தசரத சக்கரவர்த்தி இறந்த துக்கம் கொண்டாடுவதற்கு அறிகுறி இது.

அயோத்திக்குத் தெற்கே கங்கைக் கரையை நோக்கித்தான் பரதன் முதலானவர்கள் வந்தார்கள். கம்பனுள்ளமோ காவேரி தீரத்திற்கே ஓடிவந்து விட்டது! கோசல நாட்டின் வயல் வளத்திற்குக் காவேரி நாட்டின் வயல் வளத்தை உபமானமாக்குவதில் ஒரு விசேஷ திருப்தி: அவ்வளவு தமிழ்நாட்டுக் காதல், தமிழ்க் காதல்.

பரதனுடைய சோகத்தைத் தான் எவ்வளவு உருக்கமாக அப்படியே காட்டிவிடுகிறான்,

தாவர சங்கமம்
என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக்
கங்கை எய்தினான்

என்ற அடிகளில். அந்தச் சோக வெள்ளத்தில், பார்த்த பிராணிகளெல்லாம், மரஞ் செடிகளெல்லாம் அப்படிக் கரைந்து உருகி நிற்பது போலத் தோன்றுவது அனுபவத்தில் காணும் உண்மையல்லவா?

காதலில் பிறந்த கோபம்

கங்கையாற்றின் வடகரை. எங்கே பார்த்தாலும் யானைப்படை குதிரைப்படை முதலிய படைகளே கண்ணுக்குப் புலனாகின்றன. எதிர்க்

கரையில் ஒருவன் நின்றுகொண்டு இந்தப் படைகளை நோக்கிய வண்ணமாய் இருக்கிறான். பரதனுடைய தோற்றம் எவ்வளவு பரிதாபமாயிருக்கிறதோ, அவ்வளவு சீற்றத்துடன் காணப்படுகிறது அந்த வீரன் தோற்றம். என்ன வினோதமான முரண்பாடு!

ராமனைப் பிரிந்த குகன் அவன் தலை மறையும் வரையில் அந்தக் காட்டு வழியைப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தானல்லவா? உருவம் கண்ணுக்கு மறைந்தும் மனக் கண்ணுக்கு மறையவேயில்லை! நீலமேகம் போன்ற அந்த அழகும், பவளம் உரையாடுவது போன்ற அந்த வசீகர அன்புப் பேச்சும், வேடர் தலைவனுக்கு எப்போதும் பிரத்தியட்சம் தான்!

துப்புடைக் கடலின் நீர்
சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணல்

[துப்பு — பவளம். உடை — உடைய. ஒப்புடை அண்ணல் — ஒத்திருக்கும் பெருந் தன்மை வாய்ந்த ராமன்.]

என்ற தியானம் தான் எப்போதும் குகனுக்கு. நீலமேகம் போன்ற அந்தக் குளிர்ந்த வசீகர அழகு, மேகம் போலத் தியாகம் புரியும் குண சௌந்தரியத்திற்கும் ஓர் அறிகுறி தான்.

“இத்தகைய குண சௌந்தரியமும் ரூப சௌந்தரியமும் வாய்ந்த ராமனோடு போர் செய்ய அல்லவா வந்து விட்டது படை?” என்று நினைத்து விட்டான் குகன், வடகரையிலுள்ள சேனையைக் கண்டதும் அப்படி நினைத்ததும். பொங்கியெழுந்தது கோபம்:



அப்படை கங்கையை
அடைந்த ஆயிடை,
'துப்புடைக் கடலின்நீர்
சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோ(டு)
உடற்ற வேகொலாம்,
இப்படை எடுத்த(து)?' என்(று)
எடுத்த சீற்றத்தான்.

[அடைந்த ஆயிடை — அடைந்த மாத்திரத்தில். உடற்றவே கொலாம் இப்படை எடுத்தது — இந்தப் படை யெடுப்பெல்லாம் (ராமனோடு) போர் செய்யத்தானோ? சரி, சரி. எடுத்த — பொங்கியெழுந்த.]

குகனுடைய தோற்றம் இப்போது எவ்வளவு பயங்கரமாகக் காண்கிறது! "ஸாக்ஷாத் யமனோ? குகனோ?" என்றே சந்தேகிக்கத் தோன்றுகிறதாம். சிரிப்பே அறியாத முகத்தில் இப்பொழுது சிரிப்பு வந்துவிடுகிறது; அந்தச் சிரிப்பு பெருஞ் சிரிப்பாகிறது. மேலும் மேலும் அதிகரிக்கிறது. என்ன பயங்கரமான சிரிப்பு! அது கண்களில் தீயாக ஜொலிக்கிறது; நாசியில் புகை வருவது போல் சுவாசத்தை வீசுகிறது. கையில் வளைவதற்குள் புருவமாகிய வில் வளைந்துவிடுகிறது—கையில் எப்படி யெல்லாம் கூத்தாடுமோ அப்படி யெல்லாம் புருவங்கள் கூத்தாடிப் போர் புரிகின்றன!

எதிரேயுள்ள பெரிய—வலிமை வாய்ந்த—சேனை இப்பொழுது எங்கே? அது தூள் தூளாய்ப் போய்விட்டதாகத் தோன்றுகிறது குகனுக்கு:

குகன்எனப் பெயரிய
கூற்றின் ஆற்றலான்,
தொகைமுரண் சேனையைத்
துகளின் நோக்குவான்,
நகைமிகக் கண்கள்தீ
நாற, நாசியில்
புகையுறக் குனிப்புறும்
புருவப் போர்விலான்.

[பெயரிய—பெயர் உள்ள. கூற்றின் ஆற்றலான்—யமனுக்குச் சமமான ஆற்றல் படைத்தவன். தொகைமுரண் சேனையை—பெருந்தொகையாகவும் வலிமை வாய்ந்ததாகவும் உள்ள சேனைகளையெல்லாம். துகளின் நோக்குவான் — சாதாரணத் தூசி போல் பார்க்கிறான். தீநாற — தீப்பொறி பறக்க. குனிப்புறும் — கூத்தாடும். புருவப் போர்விலான் — போர் செய்யும் வில்லைப்போல் வளைந்த புருவத்தையுடைய குகன்.]

ஆங்காரத்தையும் இகழ்ச்சியையும், அச்சமே தெரியாத ஆண்மையையும் படைத்துணையாகக் கொண்டு கோபாவேசம் படுத்துகிறபாடு இது. பாட்டைப் பாடவேண்டிய தோரணையில் உணர்ச்சியுடன் பாடிப் பார்க்கும்போது, அந்தக் கோபச் சிரிப்பும், தீப்பொறி பறந்த மாதிரியாகச் சிவந்த கண்களும், கூத்தாடும் புருவங்களும் நம்மையே பயமுறுத்தப் பார்க்கின்றன.

எல்லாம் காதல் படுத்தும் பாடுதான். காட்டுத் தம்பிக்குச் சோகத்தையும் காட்டுத் தம்பிக்குக் கோபத்தையும் பிறப்பித்துவிட்டது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

192. வேடத் தம்பியின் பேராசை

இடுப்பிலே பட்டாக் கத்தியைச் சொருகிக் கொண்டு, உதட்டைக் கடித்த வண்ணம் பேசப் பார்க்கிறான்: இல்லை, வீசப் பார்க்கிறான் வார்த்தைகளை வாள் வீசுவது போலே. பேச்சுத் திணறுவதால் இடையிடையே தான் சில வார்த்தைகள் கிளம்புகின்றன. ஆனால் வார்த்தைகளாகவா வருகின்றன? அந்தப் பட்டாக் கத்தி குத்துவது போல் குத்துகின்றன, வெட்டுவது போல் வெட்டுகின்றன! வாய்ப் பேச்சும் வாள் வீச்சும் ஒன்றுதானே ராமனுடைய வேடத் தம்பிக்கு?

பாருங்கள், கேளுங்கள்

வாசாலகனா, வாய்ச் சொல் வீரனா? (வில்லின் கல்வி, வாளின் கல்விதானே இவன் கல்வி யெல்லாம்?) பேச்சுத் திணறியதும் படபட வென்று உடுக்கை யடித்துக் கொம்பு ஊதுகிறான். பேச வேண்டியதை யெல்லாம் அந்தக் கொம்பிலே வைத்து அப்படியே ஊதி விடுகிறான், — தூரத்திலுள்ள வேடர்களுக்கும் காதில் விழும்படி.

"போர் கிடைத்து விட்டது!" என்று பூரித்த தோள்களுடன், தீயைக் கக்கும் விழிகளுடன், 'வெட்டிய மொழி'கள் வெளியிட முடியாத கருத்துக்களை ஊதித் தள்ளும் வேடர் - கோனைப் பாருங்கள்.


கட்டிய சுரிகையன்,
கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன்,
விழிக்கும் தீயினன்,
கொட்டிய துடியினன்,
குறிக்கும் கொம்பினன்,
'கிட்டிய(து) அமர்' எனக்
கிளர்ந்த தோளினன்.

[சுரிகை — அரையில் கட்டிக் கொள்ளும் பட்டாக் கத்தி. துடி — உடுக்கு. குறிக்கும் கொம்பினன் — பேசவேண்டியதைக் குறிப்பாக வெளியிட்டுக் கொம்பை ஊதுகிறவன். அமர் — போர். கிளர்ந்த — பூரித்த.]

எலிகளும் புலிகளும்

என்ன பாஷையோ அது? "இதோ எலிகள் வந்து விட்டன!" என்று ஊதுகிறதாம், ஓதுகிறதாம் அந்தக் கொம்பு. என்ன, எலிகளா? பரதன் படையைக் குறித்தல்லவா பேசுகிறான்? ஆம், "இதோ எலிப் படை! இதற்கு நான் பாம்பு!" என்று ஒரு கணம் சீறுகிறது, வீரவாதம் புரிகிறது ஊது கொம்பு. மறுகணம், "வாருங்கள் வேடர்களே! இந்த வேடிக்கையை வந்து பாருங்கள்" என்று உற்சாகமாய்க் கூவி யழைக்கிறது.

என்ன இந்திரஜாலம் இது? எலிகளைக் குறிக்கும் போதே, புலிகளாகி விட்டன மரமும் செடியும் புதருமாய் இருந்த இடங்களெல்லாம்! "காட்டுப் புலிகளெல்லாம் ஒரே இடத்தில் திரண்டனவோ?" என்று பிரமிக்கும்படி அவர்கள் அப்படி ஒரே கூட்டமாய் மொய்த்து விட்டார்கள். வடகரையில் பரதனுடைய சேனை வெள்ளம், தென் கரையில் வேடர்படை யென்னும் கருங்கடல், இடையில் கங்கையாறு.



இடிப் பேச்சு

கூட்டத்தின் ஆர்ப்பாட்டங்களையும் அட்டகாசங்களையும் கடைந்து கொண்டு கிளம்புகிறது கோடையிடிக் குரல். அந்தக் குரலிலேதான் என்ன கோபம், என்ன பரிகாசம், என்ன பேரன்பு, என்ன மிடுக்கு, துடுக்கு! — எத்தனை வெட்டுகள், குத்துகள், குண்டு வீச்சுகள் அந்தப் பேச்சிலே, அந்த மூச்சிலே!


ஆழநெ டுந்திரை
ஆறுக டந்திவர்
போவா ரோ?
வேழநெ டும்படை
கண்டுவி லங்கிடும்
வில்லாளோ?
'தோழமை' என்றவர்
சொல்லிய சொல்ஒரு
சொல்லன்றோ?
'ஏழைமை வேடன்
இறந்திலன்!' என்றெனை
ஏசாரோ?

[திரை—அலை. வேழநெடும் படை—யானைகளாகிய பெரும் படை. விலங்கிடும்—விலகி ஓடிப்போய் விடும். ஏழைமை வேடன்—ஒன்றுக்கும் உதவாத இந்த ஏழைக் குகன். இறந்திலன்—சாகவில்லையே. என்றெனை—என்று என்னை.]

என்று பரதனை ஏசுவதும், தன்னைத் தானே ஏசுவதும், 'தோழமை' பேசுவதுமாயிருக்கும் இவனா 'ஏழைமை' வேடன்? அந்த நட்புச் செல்வமும் இந்த வீர சம்பத்தும் இருக்கும்போதா?

"என் தோழனை ராமன்மேல் படையெடுக்கத் துணிந்தார்களே, என்ன அநியாயம்! என்ன அறியாமை! இந்தக் கங்கையாற்றின் ஆழத்திலே இவர்களைச் 'சமாதி' செய்துவிட மாட்டேனா? முதலைகளுக்கும் மச்சங்களுக்கும் விருந்தளிக்கமாட்டேனா? இந்த ஆற்றைத் தாண்டிப் போகவா இவர்கள்?"

"வேழநெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?" என்று பல்லைக் கடித்துச் சொல்லை, கடித்த பற்களிடையே விடுதலை செய்யும்போது, "இந்த வில்வரிசை அந்தப் பல்வரிசைகளை உடைத்துவிடாதா?" என்று தொனிக்கிறது, ஓசைப்படுத்துகிறது, கோபக் கடல் இதயத்திலே குமுறிய வண்ணமாக.



"என்ன, இப்படி யானைப் படையைக் கொண்டு மிரட்டிப் பார்க்கிறான், 'பூச்சி' 'பூச்சாண்டி' காட்டுவதுபோலே? யானைக்குப் பயந்து விலகி வழிவிடுகிற ஆசாமிகளா நாம்? நமது வில்வரிசை அம்புகளை உதைத்துத் தள்ளும்போது யானைப்படையில் ஒரே குழப்பமாகி விடாதா? யானைகளே வெறிகொண்டு அந்த மற்றப் படைகளைத் துவைத்து விடும்படி அம்புகளைப் பொழிந்து தள்ளுவோம் என்பதை அறியாமல் அல்லவா வந்து விட்டார்கள்?" என்று பொங்குகிறான், அபாயச் சங்கு ஊதுகிறான், எதிரிகளை எச்சரித்து.

சிற்றலை, பேரலை

இவ்வளவு கோபாவேசத்திற்கும் வீராவேசத்திற்கும் இடையே ராமனை தன்னைத் தோழனாக்கிக் கொண்ட அந்தத் தூய பேரன்பு நினைவிற்கு வருகிறது.

தோழமை என்றவர்
சொல்லிய சொல்ஒரு
சொல்லன்றோ?

என்ற நட்புக் காதல், குரலிலே உருக்கத்தையும், இதயத்திலே அந்தத் தோழனுக்காக உயிர்த்தியாகம் செய்யவேண்டும் என்ற பேராசையையும் உண்டாக்கி விடுகிறது. அந்தத் தோழமையையும் தன்னுடைய ஏழைமையையும் எண்ணிப் பார்த்து அப்படியே உருகிப் போகிறான். "ஒன்றுக்கும் உதவாத இந்த ஏழை வேடன் உயிரை விட்டிருக்க வேண்டாமா அந்தத் தோழனுக்காக?—என்று உலகம் ஏசுமே!" என்று அங்கலாய்த்துக் கொள்கிறான்.

அந்தத் தோழமைக்காகத் தான் இப்படியெல்லாம் உருகும்போது, "அந்தப் பரதன் அப்பேர்ப்பட்ட தமையனுக்குத் துரோகம் நினைத்தானே!" என்று பொங்குகிறது இன்னும் ஒரு கோப அலை.

அஞ்சன வண்ணன், என்
ஆருயிர் நாயகன்
ஆளாமே,
வஞ்சனை யால் அர(சு)
எய்திய மன்னரும்
வந்தாரே!

என்ற போக்கிலே பேர்கும் பிரசங்கம், அந்த வேடர்களுக்கு அவர்களுடைய மொந்தைக் கள்ளைப்போல் அவ்வளவு வெறி யூட்டுகிறது:

தமையன் என்று பாராத பரதன், "தம்பி லட்சுமணன் என்ற வீரப் புலி யொன்று ராமனோடு இருக்கிறதே!" என்றும் எண்ணிப் பார்க்கவில்லையாம்:

முன்னவன் என்று
நினைத்திலன்; மொய்புலி
அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன்
என்றிலன்!

[முன்னவன்–தமையன். மொய்புலி–முரட்டுப் புலி; பெரும் புலி. அன்னான்–போன்றவன். ஓர் பின்னவன்–ஒரு தம்பி; அதாவது லட்சுமணன். என்றிலன்–என்றும் எண்ணிப் பார்க்கவில்லையே.]

"லட்சுமணன் என்ற தம்பியைத்தான் நினைத்துப் பார்க்கவில்லை! போகட்டும்; நான் ஒரு தம்பி இருக்கிறேனே, என்னையும் இகழ்ந்து தானே இந்த என் ராஜ்யத்தின் எல்லைப் புறத்திலே இப்படி வந்து நிற்கிறான்?" என்ற ஆங்காரம் வேறு வந்து விடுகிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

193. சமதர்மமும் சாகஸப் பேராசையும்

ஜாதிச் செருக்கோடும் அதிகார வெறியோடும் திரியும் முடிமன்னர்களை எப்படி வெறுக்கிறது இந்த வேடனுள்ளம்!

மன்னவர் நெஞ்சினில்
வேடர்வி டும்சரம்
வாயாவோ ?

[சரம் — அம்பு. வாயாவோ — தைக்காமல் போய் விடுமோ ?] என்று தன் வேடப் படையை நோக்கிப் பேசுவதைக் கேளுங்கள்.

ஷேக்ஸ்பியரின் ஜகப் பிரசித்தி பெற்ற 'வெனிஸ் வர்த்தகன்' என்ற நாடகத்திலே ஷைலக் என்ற யூதன், தன்னையும் தன் வகுப்பையும் இகழும் கிறிஸ்தவனை நோக்கி, "என்னைக் காயப்படுத்தும் ஆயுதம் கிறிஸ்தவர்களையும் காயப்படுத்தக் கூடியது தானே!" என்று சமதர்மம் பேசுகிறான். அந்த நாடகப் போக்குடன் இந்தக் கம்ப நாடகப் போக்கையும் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பேச்சிலேயே ஒரு போராட்டம்

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, எதிர்க் கரையிலுள்ள சேனையை மீண்டும் பார்க்கிறான், குடியானவன் அறுவடை செய்ய வேண்டிய வயல்-காட்டைப் பார்ப்பது போலே. "வில்லுக்கு இரை விளைந்து விட்டது! ஆனால் அந்த இரண்டு வில்லுக்கும் இந்த இரை போதுமா? மேலும், என்னுடைய வில்லே முழுதும் பட்சித்து விடுமே!" என்றெல்லாம் தோன்றுகிறது.

உடனே பெருங் கோபமாய்ப் பேசுகிறான். அந்தச் சொல்லம்புகளே பரத சைனியத்தைப் படுத்தாத பாடெல்லாம் படுத்தி விடுவது போலத் தோன்றுகிறது.

போனப டைத்தலை
வீரர்த மக்கிரை
போதா இச்

சேனைகி டக்கிடு !
தேவர்வ ரில்சிலை
மாமேகம்
சோனைப டத்தனி
யானைப டச்,சுடர்
வாளோடும்
தானைப டக்,குடர்
சூறைப டத்திரள்
சாயேனோ ?

[வீரர் தமக்கு—ராம லட்சுமணர்களுக்கு. இரை போதா — இரை போதாத. கிடக்கிடு—கிடக்கட்டும். சிலைமாமேகம் —வில்லாகிய பெரு மேகம். சோனைபட — சோனுமாரியாக அம்புகள் பொழிய. தனி யானைபட—பெரிய பெரிய யானைகளெல்லாம் சாய்ந்து விழ. வாளோடும் தானைபட—வாளேந்திய வண்ணம் காலாள் வீரர்கள் பொத்துப் பொத் தென்று கீழே விழ. குடர்—குடல். சூறைபட — (கழுகும் பருந்தும்) சூறையிட, கொள்ளை கொள்ள. திரள் சாயேனோ — திரள் திரளாகச் சாய்த்து வீழ்த்தி விட மாட்டேனோ ?]
என்ற பேச்சிலே கோபாவேசம் ஒரு பேயாட்டமாடிக் குகன் நடத்தக் கூடிய போராட்டத்தை 'எத்தகைய 'சப்தசித்திரம்' ஆக்கி விடுகிறது, பாருங்கள் !

பாடிப் பாடிப் பாருங்கள். 'கர்னாடக' இசையிலோ, தமிழிசை யிலோ அல்ல, இடத் தானத்திற்குப் பாடவேண்டிய பாட்டு.

கொடியைப் பறித்து முடியைச் சூட்டுங்கள் !

மறுபடியும் பார்க்கிறான் எதிர்க் கரையிலுள்ள சேனையை. பரதனு டைய கொடி குதூகலமாய்க் காற்றில் ஆடிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தெரியுமா அந்தத் தம்பியின் சோகமும், இந்தத் தம்பியின் கோபமும் ? "அந்தக் கொடியைச் சாடிப் பிடித்துக் கொண்டு வாருங்கள் !" என்று கருத்துப்படக் கர்ஜிக்கிறான். அப்படியே அந்தக் கொடியைப் பறித் துக் கொணர்ந்து ராமன் இருக்கும் இடத்திலே பறக்க விட்டு, அந்தக் கொடி நிழலிலே அவனை அழைத்துக் கொண்டுபோய் அயோத்தியில் முடி சூட்டிவிடுவோம் ! — என்று கனவு காண்கிறது வேடத் தம்பியின் ஹிருத யம். அப்படியானால் அயோத்தியா காண்டத்தினிடையே சமாப்தியாகி விடும் ராமாயணம் !

இப்போது இந்தப் பாட்டு முழுமையும் பார்க்கலாம் :

ஆடுகொ டிப்படை
சாடி, அறத்தவ—
ரே ஆள,
வேடுகொ டுத்தது
பார் !' எனும் இப்புகழ்
மேவிரோ ?
நாடுகொ டுத்தஎன்
நாயக னுக்கிவர்
நாம்ஆளும்


காடுகொ டுக்கிலர்
ஆகிஎ டுத்தது
காணீரோ ?

[ஆடு கொடிப்படை — ஆடும்படி எடுப்போடு கொடியைப் பறக்கவிட்டிருக்கும் சேனை. அறத்தவர் — தரும மூர்த்தியான ராமன். வேடு — வேடர் குலம். பார் — பூமி; (இங்கே) ராஜ்யம். மேவீரோ—அடைய மாட்டீர்களா ? எடுத்தது — படையெடுத்தது]

வேடு கொடுத்தது ராமராஜ்யம் !

தாயாதிக்காரன் அநியாயமாகப் பறித்துக் கொண்டானும் தருமமூர்த்தியின் ராஜ்யத்தை : அந்தப் பழி அவனுக்கு ! இனி, "அந்த ராஜ்யம் ராமனுக்குசதான !" என்று சொல்ல வந்தவன், "வேடு கொடுத்தது ராஜ்யம் !" என்ற புகழ் தன்னுடைய வேடர் குலத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அந்தப் புகழ் தனக்கு வேண்டும் என்றுகூட ஆசைப் படவில்லை. வேடர் குலத்திற் கெல்லாம் அந்தப் புகழை உலக சரித்திரத்தில் உரிய தாக்கிக் காட்ட வேண்டுமாம். முடியை ராமனுக்கும், முடி கொடுத்த புகழைத் தன் இனத்திற்கும் சூட்ட விரும்பும் உள்ளத்தைப் பாருங்கள்.

"ராம ராஜ்யம் 'வேடு கொடுத்தது !" — என்ன



நெஞ்சுத் துணிவு, என்ன பேராசை! — என்ன பெருமை இந்த வேடனுக்கு!

'வேடுகொ டுத்தது
பார்' என்னும் இப்புகழ்
மேவிரோ?

—திரும்பத் திரும்பப் பாடிப் பாருங்கள். "தேவர் கிடக்கிடு!" என்ற ஏச்சிலும், "வேடு கொடுத்தது!" என்ற பேச்சிலும், குகனுடைய வீர ஹிருதயம், தியாக ஹிருதயம், அப்படியே புலனாகிறதல்லவா?

'மாட்சிமை தங்கிய' குகன்

இந்த வேட ஹிருதயத்திற்குள்ளே தான் எத்தகைய 'மாட்சி கொலுவிருக்கிறது! "உண்மையான ராஜ ஹிருதயம் இது!" என்று சொல்லத் தோன்றுகிறது. "நாம் ஆளும் காடு" என்று எவ்வளவு பெருமிதத்துடன் பேசுகிறான். "நாட்டைப் பறித்துக் கொண்ட பாவி, நாம் ஆளும் காட்டிலும் அனுமதியில்லாமல், உத்தரவு பெறாமல், அடியெடுத்து வைக்கத் துணிந்தான், படையெடுக்கத் துணிந்தான்!" என்ற கோபம், இந்தக் காட்டரசனுடைய 'மாட்சிமை'க்குத் தூபம் போடுகிறது. எந்த நாட்டரசனுடைய மாட்சிமைக்குத்தான், "நாம் ஆளும் காடு' என்ற இந்த வீர மாட்சிமை குறைந்ததாகும்? "வேடு கொடுத்தது ராம ராஜ்யம்!" என்ற அந்த லட்சிய மாட்சிமைக்கு முன்பே, வேறு ராஜ மாட்சிமைகளெல்லாம் கூசிக் குலைய வேண்டியதுதான்!

குகன் பேசும்போது அவன் படை வீரர்களுக்கு எவ்வளவு கர்வமும் உத்ஸாகமும் பொங்கி விடுகின்றன இதயங்களில்! "ராமனுக்கு ராஜ்யம் கொடுத்த புகழ்" தங்களுக்கும் தங்கள் இனத்திற்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆசை அவர்களுடைய வீராவேசத்தைக் காட்டுத் தீயாக ஜொலிக்கச் செய்கிறது.

"நாம் ஆளும் காடு" என்று குகன் பேசும்போது அவர்கள் அவனை மாட்சிமை தங்கிய மகாராஜாவாக அங்கீகரிப்பதுடன், "நாம் எல்லாரும் இந்த ஆட்சியில் பங்குடையவர்கள்!" என்ற பொதுமையுணர்வும் அடைகின்றனர்.

நாம் எல்லாரும்
இந்நாட்டு மன்னர்!

என்று பாடினார் பாரதியார். குகனுடைய வேடர்கள்,

நாம் எல்லாரும்
இக்காட்டு மன்னர்!

என்ற உணர்ச்சியை அடைகின்றார்கள்.

குகன் தெற்குக் கரையில் நிற்பதை, கங்கையின் வடக்குக் கரையிலே பரதனுடைய படை வீரர்களுடன் நின்று கொண்டிருந்த சுமந்திரன் பார்த்து விட்டான். "ராமனுக்கு உயிர்த் தோழனாகி விட்ட வேடர் தலைவனல்லவா?" என்று தெரிந்து கொண்டான். உடனே பரதன் முன்பாகப் போய் நின்று அவனுக்குக் குகனைச் சுட்டிக் காட்டி இன்னாரென்று தெரிவிக்க விரும்புகிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

194. மயக்கம் தெளிகிறது

இரும்பால் வார்த்த உருவங்கள்போல நிற்கும் வேடர்களை நோக்கி, கோப நெருப்பைக் கக்கும் ஓர் எரிமலை போல நின்று குமுறிக் கோஷித்துக் கொண்டிருக்கும் குகனைப் பரதனுக்குச் சுட்டிக் காட்டுகிறான் சுமந்திரன். "எவனுடைய தயவில்லாமல் நாம் இந்தக் கங்கையாற்றைக் கடந்துபோக முடியாதோ, அந்த ஆசாமி அதோ நிற்கிறான். கணக்கில்லாத தோணிகளுக்குச் சொந்தக்காரன்—'நாவாய் வேட்டுவன்' (தோணிக்கார வேடன்)" என்கிறான்.

'தூண்டில் வேடன்' மீன் பிடித்து விற்றுப் பணக்காரன் ஆனதும் 'தோணி வேடன்' ஆகிறான். தோணி வேடனுக்குப் பொருளும் ஆள் — கட்டும் வாய்க்கும்போது வேடர்தலைவன் ஆகிறான், வேடராஜா ஆகிறான். "அப்படி இந்தக் கங்கையின் இரு கரையிலுமுள்ள காடுகளுக்கும் அரசனாக இருப்பவன் அவன்" என்கிறான் சுமந்திரன் பரதனிடம்.

ராமனுக்கு உயிர்த் துணைவன்

"வடகரையிலுள்ள முனிவர்களும் தென்கரை வேடர்களைப் போல் குகனுடைய குடிகள்!" என்று தொனிக்கப் பேசுகிறான் சுமந்திரன். வேடர்கோன் முனிவர்களுக்கும் காவலாகத்தான் இருக்கிறான்: காவலன் தானே அரசன்? எனவே, "நாம் ஆளும் காடு" என்று குகன் வேடர்களை நோக்கிப் பெருமிதம் தோன்றக் குறிப்பிட்ட அந்தக் 'கானக ராஜ்யம்'— அந்தக் காட்டரசு — கங்கையின் இரு கரையிலும் பரவிக் கிடப்பது தான். "இத்தகைய குகன் ஒப்பற்ற உங்கள் குலநாதன் ராமனுக்கு உயிர்த்துணைவன்" என்று, தான் ராமனைப் பிரிந்த பின்பு தெரிந்து கொண்ட அந்த முக்கிய விஷயத்தைப் பரதனுக்குத் தெரிவிக்கிறான்.

சுமந்திரனுடைய பேச்சைக் கேட்போம் கவிதை வாயிலாக:

கங்கையிரு கரையுடையான்,
கணக்கிறந்த நாவாயான்,
உங்கள்குலத் தனிநாதற்(கு)
உயிர்த்துணைவன், உயர்தோளான்,
வெங்கரியின் ஏ(று)அனையான்,
விற்பிடித்த வேலையினான்,
கொங்கலரும் நறுந்தண்தார்க்
குகன்என்னும் குறியுடையான்.

[நாவாயான் — தோணிகளையுடையவன். குலத்தனிநாதற்கு — குலத்தின் தனி நாயகமான ராமனுக்கு. வெங்கரியின் ஏறு அனையான் — வீரம் கொண்ட மதயானை போன்றவன். வில் பிடித்த வேலை — வில்லேந்திய காலாட்படையாகிய சமுத்திரம். கொங்கு அலரும் நறுந் தண்தார் — வாசனை பரவும்படியான குளிர்ந்த பூமாலை. குறியுடையான் — பேர் கொண்டவன்.]

என்ன வாக்கு! என்ன பிரேமை!

என்ன குளிர்ச்சியான வாக்கு! கங்கைக் கரையிலோ கடற்கரையிலோ வீசும் காற்றின் குளிர்ச்சி இந்த வாக்கிலும் வீசுவது போலத் தோன்றுகிறது. இப்படிக் குகனைக் குறித்துப்பேச ஆரம்பித்ததும் சுமந்திரனுக்கு உள்ளத்திலே உத்ஸாகம் பொங்க, வாய் ஓயாமல் துதிபாட விரும்புகிறது. 'எதற்காக வருகிறான் தெரியுமா அந்த வீரன், அந்த ஈகையன்?



'கல்காணும்திண்மையான்,
கரைகாணாக் காதலான்,
அல்காணில் கண்டனைய
அழகமைந்த மேனி
யான்,—
மல்காணும் திருநெடுந்
தோள்
மழைகாணும் மணி
நிறத்தாய்! —
நிற்காணும் உள்ளத்தான்
நெறிஎதிர் நின்றனன்!'
என்றான்.

[கல் காணும் திண்மையான் — தேக திடத்தைப் பார்த்தால் கற்பாறை போல் இருக்கிறவன். அல் காணில் கண்டனைய — இருட்டைத் திரட்டி உருவமாக்கிக் கண்ணில் காட்டுவது போன்ற. மல்காணு திரு

நெடுந் தோள் - மல்யுத்தத்தையே திரட்டிச் செய்தது போன்ற அழகிய நெடுந் தோள். மழை-(இங்கே) நீலமேகம். மணி நிறத்தாய் - நீலமணி போன்ற நிறங் கொண்ட பரதனே. நிற்காணும் உள்ளத்தான் — உன்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்பியவனாய். நெறியெதிர் நின்றனன் - வழியெதிரே நிற்கின்றான்.]



குகன் கோபம் கொப்பளிக்க மத யானை போல் நிற்கின்ற நிலையைப் பார்த்தும், 'அது அவனுடைய சுபாவம்' என்றுதான் நினைக்கிறான் சுமந்திரன். மூங்கில்-வில்லைப் பிடித்த வேடர் கூட்டம் கருங்கடல் போல் கொந்தளிப்பதைப் பார்த்தும், "பரதனை வரவேற்கத்தான் அவ்வளவு ஆடம்பரமும்!" என்று கருதுகிறான். "உன்னுடைய அண்ணனது உயிர்த் தோழன் உன்னைக் காண்பதற்குத்தான் வந்து நிற்கிறான்" என்று விளக்கமாய்ச் சொல்லுகிறான்.

"கருங்கற் பாறைபோன்ற உடம்பு; உள்ளமோ கரைகாணாத அன்புக்கடல்!" என்று வியக்கிறான், பாராட்டுகிறான். அமாவாசை இருட்டை உருட்டித் திரட்டி உருவாக்கி ஒரு சிற்பம் போல் கண்ணில் காட்டுகிற அந்த அழகையும், பரதனுடைய நீலமேகமும் நீலரத்தினமும் போன்ற இந்த அழகை அனுபவிப்பதுபோல் அனுபவிக்கிறான் சுமந்திரன்.

பரதன் பிரேமையும், குகன் பச்சாத்தாபமும்

குகனைக் குறித்துச் சுமந்திரன் இப்படிப் பேசியதும் பரதனுக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது. தன் தமையனுடைய உயிர்த் தோழன் தன்னை வந்து பார்ப்பதைக் காட்டிலும் தானே போய் அவனைப் பார்ப்பது நல்லதென்று நினைத்தான். தன்னிடம் படகில்லாததால் முதல் முதல் தான் அவனைப் போய்ப் பார்க்கமுடியாது என்பதுகூட இப்பொழுது நினைவில் இல்லை.

"அண்ணனுடைய உயிர்த் தோழனும் எனக்கு அண்ணன்தான்! நானே எதிர் சென்று வரவேற்க வேணடும்" என்று சொல்லிக் கொண்டு அப்படியே எழுந்து நடந்து கங்கை வெள்ளத்தின் ஓரத்திலே வந்து நின்றான். இப்போது தான், "இந்த வெள்ளத்தை எப்படித் தாண்டுவது?" என்ற பிரச்னை உள்ளத்தில் பிறக்கிறது. இப்பொழுதுதான் குகனும் பரதனுடைய நிலையை உள்ளவாறு காண்கிறான்;

வற்கலையின் உடையானை,
பாசடைந்த மெய்யானை,
நற்கலையில் மதியென்ன
நகைஇழந்த முகத்தானைக்,
கல்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்:
வில்கையினின்(று) இடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான்!

[வற்கலை — மரவுரி. மெய் — உடம்பு. நற்கலையில் மதி — அழகிய தன் ஒளி மழுங்கிப் போயிருக்கும் சந்திரன். நகை - புன்சிரிப்பு; முக மலர்ச்சி. கல் கனியக் கனிகின்ற துயரானை — கல்லில் செதுக்கிய சிலை கூட அப்படியே கனிந்து இரங்கும்படி அத்தகைய துயரம் கொண்டிருக்கும் பரதனை. வில் கையில் நின்று இடைவீழ — தன்னுடைய வில், தான் உணர்ச்சியற்று நின்ற நிலையில். கையிலிருந்து தானாகவே நழுவி நிலத்தில் விழ. விம்முற்று — கலங்கிச் செயலற்று.]

மரவுரியும் மாசடைந்த மெய்யுமாக நிற்கும் பரதனுடைய முகத்தைப் பார்த்துவிட்டான் குகன். அழகான வட்டமுகம். பூரண சந்திரன்போல் மகிழ்ச்சி - நிலவு பொழிந்து தன்மை வாய்ந்தது. ஆனால் இப்போது எப்படியிருக்கிறது? அதே சங்கிர வட்டம் மேற்கே அஸ்தமிக்கும் போது சூரியன் கிழக்கே ஜொலிக்க, இந்த உதயம் காரணமாக அது ஒளியிழந்து வெளுத்துப் போயிருக்குமல்லவா? முழு வட்டம் அப்படியே இருந்தும், ஒளியும் அழகும் மங்கிப் போனதால் நிறங் கெட்டு வெளிறிப் போன ஏதோ ஒரு மேகத்தின் வட்டமோ என்று சொல்லத் தோன்றும். அப்படித் தோன்றுகிறதாம் குகனுக்குப் பரதன் திருமுகம்.

துயரத்திலே கனிந்தது போலிருக்கும் அம் முகத்தைப் பார்த்தால், கல்லிலே செதுக்கிய சிலையும் கனிந்து விடும்! குகனுடைய கரைகாணாக் காதலுள்ளம் பட்ட பாட்டை என்னென்பது?

குகன் ஸ்தம்பித்து உணர்ச்சியற்று நிற்கிறான். கை வில் நழுவித் 'தடா'ரென்று கீழே விழுந்து விடுகிறது. குகன் திடுக்கிட்டு மயங்கி இப்படிச் சிறிது நேரம் நின்ற பின்புதான், மயக்கம் தெளிகிறது.

ராமாயணம்

பி. ஸ்ரீ.

195. குக-பரத சமதர்மம்

எதிர்க் கரையிலே பரதனுடைய சேனையைப் பார்த்துப் பெருஞ் சினங்கொண்டு வேடர்களை நோக்கி, "மன்னவர் நெஞ்சிலே வேடர் போடும் அம்பு பாயாதா?" என்றெல்லாம் பொருள்படப் பேசிய வார்த்தைகள், பரதனை நேர்முகமாய்ப் பார்த்து விட்ட குகனுடைய நெஞ்சிலே திரும்பிப் பாய்கின்றன அம்புகளாகவே! அந்த உணர்ச்சியில் — அந்த ஹிம்ஸையில் – உணர்விழந்து மெய் சோர்ந்து கை சோர்ந்து நின்று சிறிது நேரம் சென்றதும் மனம் தெளிந்து மறுபடியும் பரதனை நோக்குகிறான்.

இதயம் அலறுகிறது!

உருவத்தில் பரதன் ராமனை ஒத்திருப்பதும், அவனுக்குப் பக்கத்தில் நிற்பவன் ராமன் தம்பிபோல் இருப்பதும் குகனுள்ளத்தை வசீகரித்து விடுகின்றன. பரதனுடைய தவ வேடமும் ராமனுடைய தவக் கோலத்தை நினைப்பூட்டுகிறது. அந்தத் தோற்றமும் துயரமும் உள்ளத்தை உருக்கி விடுகின்றன :

'நம்பியும்என் நாயகனை
ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்;
தவவேடம் தலைநின்றான்;
துன்பம்ஒரு முடிவில்லை!
திசைநோக்கித் தொழுகின்றான்;—
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்(பு)!' என்றான்.

[நம்பி — ஆடவர்களில் சிறந்தவன், (இங்கே) பரதன். நாயகன் — தலைவனாகிய ராமன். தலைநின்றான் — தாங்கி நிற்கிறான். பிழைப்பு — பிழையான காரியம்.]

அந்த முகத்தைப் பார்க்கப் பார்க்க, "அவன் துன்பத்திற்கு முடிவே இல்லை!" என்று தோன்றுகிறது குகனுக்கு. "ராமன் போயிருக்கிற அதே தென் திசையை நோக்கி யல்லவா தொழுகின்றான்?" என்று இப் போது பனிச்சென்று அவன் நிற்கும் நிலையிலும் ஈடு படுகிறான். ஞானோ தயமாகிறது: "எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?" என்று இதயம் அலறுகிறது.

தயக்கம், வெட்கம், சந்தேகம்

எனினும் தான் செய்த பிழையை ஒப்புக்கொள்ளத் தயங்குகிறான், வேடர்களிடம். "நமது தலைவனுக்கு வந்த ஆத்திரமென்ன, வீராவேசம் என்ன, கோபாவேசம் என்ன — கண்களிலும் முகத்திலும் வெளிப்பட்ட போர் வெறி என்ன? இப்போது அவையெல்லாம் எங்கே?" என்று அந்த வேடர்களும் திகைத்து நிற்கிறார்கள். இப்போது தன் பிழையை ஒப்புக் கொள்ள வேடர் தலைவனுக்கு வெட்கமாகவும் இருக்கிறது.

வெட்கத்தை மறைக்க முயன்று, ஏதோ சந்தேகம் கொண்டவனைப் போல் வேடர்களை நோக்கிப் பேசுகிறான்:

'உண்(டு) இடுக்கண் ஒன்றுடையான்,
உலையாத அன்புடையான்,
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்,
கண்டுணர்ந்து பெயர்கின்றேன்;
காமின்கள் நெறி!' என்று,
தண்துறையோர் நாவாயில்
ஒருதனியே தான்வந்தான்.

[உண்டு இடுக்கண் ஒன்றுடையான் — ஏதோ ஒரு துன்பத்திற்கு உள்ளாகி யிருக்கிறான். உலையாத — நீங்காத. குறிப்பெல்லாம் — மனக் கருத்து முழுவதையும். பெயர்கின்றேன் — மீண்டு வருகிறேன். காமின் கள் நெறி — வழி துறைகளை யெல்லாம் பாதுகாத்துக் கொண்டிருங் கள். என்று — என்று சொல்லி. தண்துறை — குளிர்ந்த (கங்கைத்) துறை ஒன்றில். ஓர் நாவாயில் — ஒரு தோணியில். ஒரு தனியே — தன்னந்தனியனாய். தான் — குகன் தான்.]

"முகத்தைப் பார்த்தால் ஏதோ ஒரு மனக்கஷ்டம் உடையவனென் றும், கைகூப்பி நிற்கின்ற நிலையைப் பார்த்தால் ராமனிடம் உலையாத அன்பு உடையவன் என்றும் தோன்றுகிறது. ராமனுடைய தவ வேஷத் தை இவனும் தரித்துக் கொண்டு ஆண்டிபோல் வந்திருக்கிறான். எனினும் நகரவாசியல்லவா? வேஷத்தை நம்பி மோசம்போய் விடலா காது! நானே நேரில் போய் உள்ளக் கருத்தை யெல்லாம் உள்ளபடியே கண்டு உணர்ந்து வருவேன். நீங்கள் அதுவரையிலும் ஜாக்கிரதையாகவே கரையேறும் துறைகளையெல்லாம் பாதுகாத்திருங்கள்'" என்று கட்டளை யிடுகிறான் குகன் வேடர்களை நோக்கி. பிறகு, தன்னந் தனியனாக ஒரு தோணியில் ஏறிக்கொண்டு வடகரையை நோக்கி வருகிறான்.


குகன் தோணியில் வருவதைப் பரதன் பார்த்து விடுகிறான். தொழுதுகொண்டே எதிரில் நிற்கிறான். ராமன் போன தென் திசையை நோக்கிப் பரதன் தொழுது கொண்டிருப்பதாக ஊகித்தானே குகன், அந்த ஊகம் சரியன்று. குகன் இருந்த திசையை நோக்கித்தான் பரதன் அப்போதும் தொழுதான், இப்போதும் அவனுக்கு எதிரே தொழுது நிற்கிறான்.

படகில் வந்த குகன் கரையில் குதித்ததும், தொழுது நின்ற பரதனை வணங்குகிறான்; காலில் விழுந்து கும்பிடுகிறான். தானும் அப்படியே அவன் காலில் விழுகிறான் பரதன். அப்படி விழுந்த பரதனைத் தூக்கித் தழுவிக் கொள்கிறான் குகன்.

கோசல நாட்டுக் கிரீடம் சூட்டியிருக்கவேண்டிய பரதன் காட்டிலுள்ள வேடர் தலைவன் அடிகளில் விழுந்து, "அண்ணனுடைய தோழனும் நமக்கு அண்ணன்தான்!" என்று வணங்குவதையும், அந்த வேடத் தலைவன் இந்தத் தவ வேட ராஜகுலத் தம்பியைத் தழுவி மகிழ்வதையும் எவ்வளவு ஆனந்தமாக நோக்குகிறான் கவிஞன் :

வந்(து),எதிரே தொழுதானை
வணங்கினான் ; மலர் இருந்த
அந்தணனும் தலைவணங்கும்
அவனும்,அவன் அடிவீழ்ந்தான் ;
தந்தையினும் களிகூரத்
தழுவினான் ; தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான்.

[வந்து – படகில் வந்து. எதிரே தொழுதானை - தனக்கு எதிரே கரையில் நின்று தொழுத பரதனை. வணங்கினான் – அடி விழுந்து வணங்கினான். மலர் இருந்த அந்தணன் – பிரம்ம தேவன். அந்தணனும் தலை



வணங்கும் அவனும் — லா க்ஷாத் பிரம்மாவே தலை வணங்கும்படியாக அவ்வ ளவு சிறந்த குணாதிசயம் வாய்ந்த பரதனும். அவன் அடிவீழ்ந்தான் — குகனது அடியில் விழுந்தான். தந் தையினும் களிகூரத் தழுவி னன் - பிள்ளையைக் கண்டு அன்பு கூர்ந்த தந்தைக்கு உள்ள களிப்பைக் காட்டி லும் தன் களிப்பு மிகத் தழுவிக் கொண்டான். தக வுடையோர் — பெருங்குண முள்ள பக்தர்கள். சிந்தை யினும் — சிந்தையிலும். சென்னியினும் — தலையி லும். சீர்த்தியான் — சிறப் புப் பொருந்திய புகழை யுடைய குகன்.]

வால்மீகி ராமாயணத் தில் இவ்வாறு கூறப்பட வில்லை. அந்த ராமாயணத் தோடு இந்த ராமாயணத் தையும் பொருந்தச் செய்ய வேண்டுமென்று சில பண் டிதர்கள்நேராகப் பொருள் கொள்ளாமல் இக் கவி யைச் சித்திரவதைசெய்து வேறு விதமாகப் பொருள் கூறுவதுண்டு.

* * *

குகனும் பரதனும் ஒரு வரை ஒருவர் அடிவீழ்ந்து வணங்கும் ஆனந்தக் காட்சி யை அகக்கண்ணால் நேரே கண்டு கொண்டான் கம் பன்; கண்டு அக் காட்சி யிலே அன்பு மயமான, பக்திமயமான, சகோதர தர்மம் — சமதர்மம் காண்கி றான்.



196. உயிர் — அதிக உயிர்.

“நாட்டரசனும் காட்டரசனும் எவ்வளவு வணக்கமாகச் சகோதர தர்மத்தையும் சமதர்மத்தையும் அனுஷ்டித்துக் காட்டுகிறார்கள்!” என்று ஒரே வியப்பில் மூழ்கிவிட்ட கவிஞன், “அத்தகைய சந்திப்பிலே, ஜாதி வகுப்பு நிறம் முதலான வேற்றுமைகளெல்லாம் அறவே மறைந்து போக, மனித நிலை இவ்வுலகிலேயே அமர நிலையை அடையக் கூடும்!” என்றெல்லாம் உபதேசிக்க ஆசைப்படுகிறான். உண்மைக் கவியானதால் உபதேசம் வெளிப்படவில்லை; குறிப்பாக, ஆழ்ந்த புதை பொருளாகத்தான் கிடைக்கிறது.

கண்டு காட்டும் பெருநெறி

சூரியகுல அரசிளங் குமாரனாகிய பரதன் க்ஷத்திரியனாயினும், அந்தணனுக்கும் மேலான அருளாளனாக விளங்குகிறானாம். “குணநிசயத்திற்குத் தோற்று அந்தணனும் தலைவணங்கும் பரதன்” என்று சொல்ல வந்த கவிஞன், “மலர் இருந்த அந்தணனும் தலைவணங்கும் அவனும் அவன் அடி வீழ்ந்தான்!” என்று சுட்டிக் காட்டுகிறான் பரதனை. சாதாரண அந்தணன் மட்டுமா, முனிவன் மட்டுமா?—‘சாக்ஷாத் பிரம்மதேவனும் தலைவணங்கும் அந்தணாளன் பரதன்!” என்று பரவசமாகிறான்.

இத்தகைய அருளழகால் வணங்கப் பெற்ற வேடனது வினயத்திலும் அந்தப் பேரன்பிலும் தான் பரவசமாகாமல் இருக்க முடியுமா? தலைவணங்கும் சிறப்பு வாய்ந்தவன் பரதன் என்றால், “தலைமேல் வைத்துக் கொண்டாடத் தக்க சிறப்புப் பொருந்தியவன் குகன்” என்கிறான் கவிஞன். “சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்” என்று சிறப்பிக்கிறான். அப்படிக் குகனைப் போற்றக் கூடியவர்களே “தகவுடையோர்” (தகுதியும் பெருங் குணமும் வாய்ந்தவர்கள்) என்பது குறிப்பு. பக்தர்கள், ‘குகப் பெருமான்’ என்று போற்ற வீற்றிருக்கும் பேராளன்

அல்லவா? திருப்பாணாழ்வாரைத் "தாழ்குலத்தவர்" என்று கருதிய சாதித் திமிருக்குப் பிராயச் சித்தமாகத் தம் தோளிலே தூக்கிச் சென்ற லோக சாரங்க முனிவருக்கும் அத்தகைய பெரு நெறி காட்டிய சிறப்பு குகனுக்கு உரியதல்லவா?

குகன் பரதனுக்கு வயதில் மூத்தவன்; ராமனால் தோழனாகவும், தம்பியாகவும் அங்கீகரிக்கப் பெற்றவன். எனவே பரதன் உள்ளத்தில் — பரதனுக்கும் தெரியாமலே — குகனை அண்ணனாக மதிக்கவேண்டுமே என்ற ஓர் உணர்ச்சி வேரூன்றி விட்டது என்று ஊகிக்கலாம். "அண்ணன் தந்தைக்குச் சமானன்" என்று கருதுவது நம்மவர் மரபு. எனவே குகனும் பரதனது அக உணர்ச்சியை உணர்ந்து கொண்டதுபோல், "தந்தையினும் களிகூரத் தழுவினான்" என்கிறான் கவிஞன். அகம் அகத்தைக் கண்டு கொண்டது: நாடு காடு, உயர்வு தாழ்வு, ஆசாரம் அநாசாரம் குறுக்கிடுமா இனி? தீண்டாமை மாண்டது: தீண்டித் திருந்துவதும் திருத்துவதுமாகிய பெரு நெறி தெரிந்து விட்டது.

இவ்வளவு தெளிவாகக் கம்பன் கண்டு காட்டியுங்கூடப் பண்டிதர் உலகம், "அடிவீழ்ந்தவன் யார்? தழுவிக் கொண்டவன் யார்?" என்று வினாக்களை யெழுப்பி, "அடிவீழ்ந்தவன் குகன் தான்" என்றும், "தழுவிக் கொண்டவன் பரதன் தான்" என்றும் புலமைத் திறம் பேசுவது உண்டு. ஆனால் கம்பனே தெளிவாக, "தழுவிக் கொண்டவன் வேடர் வேந்தன் தான்" என்று பார்த்துச் சொல்லி விடுகிறான், அடுத்த பாட்டிலே.

பரதன் செய்தி

பரதனைத் தழுவிய வண்ணம் அந்த அழகிய கண்களை — ராமன் கண்களைப் போல் மலர்ச்சி பெற்றுத் தன்னை நோக்கிய அக்கண்களை — நோக்குகிறான் வேடன். அந்த வலிமையும் அழகும் பொருந்திய தோள்களையும் ஆசையோடு பார்த்து, "நீ வந்த காரியம் என்ன?" என்று கேட்கிறான். அந்தக் கேள்வியும் பரதன் பதிலும்:

தழுவின புளிஞர் வேந்தன்,
 தாமரைச் செங்க ணானை,
'எழுவினும் உயர்ந்த தோளாய்,
 எய்திய(து) என்னை?' என்ன,
'முழுதுல(கு) அளித்த தந்தை,
 முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன், அதனை நீக்க
 மன்னனைக் கொணர்வான் வந்தேன்!'

[புளிஞர் வேந்தன் — வேடர்களுக்கு அரசனான குகன். தாமரைச் செங்கணான் — செந்தாமரை மலர் போன்ற தன் அழகிய விழிகளை மலர விழித்துத் தன்னை நோக்கிய பரதன். எழு — தூண். எய்தியது என்னை - வந்தது என்ன காரணமோ. என்ன — என்று கேட்க. முழுது உலகு அளித்த தந்தை - இராஜ்யம் முழுவதையும் அரசாண்ட தந்தையாகிய தசரதர். முந்தையோர் - மூதாதைகள்; முன்புள்ள அரசர்கள். முறை -

நீதி முறை; பரம்பரையான நீதிமுறை. வழுவினன் - தவறி விட்டான். மன்னன் - மன்னனாகிய ராமன்.]

குகன் தன்னுடைய கேள்விக்கு இப்படியொரு விடை கிடைக்குமென்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. "நாட்டுத் தம்பியும் நல்ல தம்பிதான். அண்ணனைப் பார்த்துப் போக வந்திருக்கிறான்" என்று தான் குகன் நம்பியிருக்க வேண்டும். பரதன் விடை குகனுக்குப் பெருவியப்பையும் பெருமகிழ்ச்சியையும் ஒருங்கே விளைத்து விடுகிறது.

"தந்தை தவறு செய்துவிட்டான். அதை நீக்கிக் கொள்ளாமலே போய்விட்டான்! அந்தக் குறையை—அந்த வழுவைத் துடைத்துவிட வேண்டும். அதற்காக ராமனை அழைத்துக் கொண்டுபோக வந்தேன்; அழைத்துக் கொண்டு போய் முடிசூட்டப் போகிறேன்" என்ற பரதன் விடை எவ்வளவோ அதிசயத்தையும் ஆனந்தத்தையும் விளைப்பதோடு,

மன்னனைக் கொணர்வான் வந்தேன்!

என்ற அந்த வசனம் அப்படியே உருக்கி விடுகிறது குகன் உள்ளத்தை.



கைகேயி தனக்காக வாங்கித் தயாராக வைத்திருந்த அந்தக் கிரீடம் ராமன் தலையில் இருப்பதாகவே எண்ணுகிறன் பரதன். தசரதனுக்குப் பிறகு மன்னன் ராமன்தான் என்ற பரிபூரண இதய விசுவாசம் அப்படியே தன்னை வெளியிட்டுக் கொள்ளுகிறது—"இதோ என் இதய-தஸ்தாவேஜில சாஸனம் பண்ணி வைத்திருக்கிறேன் பார்! அவன் தான் மன்னன், எனக்குக் கொஞ்சமும் உரிமையில்லை!" என்று.

குகன் செயல்

குகனுடைய மனஎழுச்சியை—உத்ஸாகத்தை—என்னென்பது? குகன் அப்போது அடைந்த நிலையையும், செய்த செயலையும் நேரில் பார்த்து வந்த ராமராஜ்ய ஆஸ்தான கவிஞன் தானே வருணிக்க முடியும்!

கேட்டனன் கிராதர் வேந்தன்
    கிளர்ந்தெழும் உயிரன் ஆகி
மீட்டுமண் அதனில் வீழ்ந்தான்,
    விம்மினன், உவகை வீங்கத்,
தீட்டரு மேனி மைந்தன்
    சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன், பொய்யில்
    உள்ளத்தன், புகல லுற்றான்.

[கிராதர் வேந்தன் — வேடராஜாவான குகன். கிளர்ந்து எழும் உயிரன் ஆகி —'அரைகுறையாக இருந்த உயிர் இதோ பூரணமாய் நிறைந்து விட்டது' என்னும்படி விசேஷ ஜீவகளை பெற்றவனாகி. மீட்டும் மண் அதனில் வீழ்ந்தான் – மறுபடியும் திடீரென்று தரையில் வீழ்ந்தான். தீட்டரு மேனி மைந்தன் — ஓவியத்தில் எழுதமுடியாத எழில் வாய்ந்த பரதன். சேவடிக் கமலப் பூ – செந்தாமரை போன்ற அழகிய பாதங்கள். பூட்டிய கையன் – கைகளால் இறுகப் பிடித்தவனாய். பொய்யில் உள்ளத்தன் – பொய்ம்மை தெரியாத உள்ளத்தவனாய். புகலலுற்றான் – வாய் விட்டுப் பேசத் தொடங்கினான்.]

பரதன் பதில் சொன்னானோ இல்லையோ, குகன் திடீரென்று பூமியில் விழுந்து விட்டான். எவ்வளவு வேகமாக—எதற்காக? அப்படி "மன்னனைக் கொணர்வான் வந்தேன்" என்று சொன்னவனுடைய கால்களைப் பிடித்துக் கட்டிக் கொள்வதற்காகத் தான்! "இவன் சாதாரண மனிதப் பிறவி அல்லன், தெய்வ சமானன்!" என்று பட்டது அந்தக் கள்ளங் கவடற்ற உள்ளத்திலே.

"உயிர், அதிக உயிர், நிறைந்த உயிர் வேண்டும்" என்றான் ஓர் ஆங்கிலக் கவி. அந்த நிறைந்த உயிரைக் குகனுக்கு அளித்தது பரதன் செய்தி என்கிறன் தமிழ்க் கவி. "மன்னனைக் கொணர்வான் வந்தேன்!" என்று சொன்ன இந்த மன்னனுக்கு (பரதனுக்கு)த் தாய் கொடுத்த சிங்காசனமும் வேண்டுமோ? இவன் ஏறி நிற்கும் குணப் பொற்குன்றமே போதாதா? இந்த நினைப்பிலே பொங்கி நிறைகின்றது குகனுக்குப் புத்துயிர்.

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

197. தங்கமும் உரைகல்லும்

ராமனை ராஜ்யத்திலிருந்து அநியாயமாகத் துரத்துவதற்கு உண்மையான காரணம் பரதன் தான் என்றே எண்ணிக் கொண்டிருந்தான் குகன். லட்சுமணன் சொன்ன வரலாற்றைக் கேட்டுக் குகன் செய்துகொண்ட ஊகம் அது. ராமனுடைய இந்த இரு சகோதரர்களும் ராம பாசத்தால், ராம பக்தியால் பரதனைத் தவறாக மதித்து விட்டார்கள்! நெருங்கி உறவாடிப் பழகிய இரத்த-பாசத்திற்கே அந்தக் குணநிசயம் புரிந்துவிடவில்லை! இந்த உரைகல்லுக்கு அந்தத் தங்கம் இப்போது தானே வந்து சேர்ந்திருக்கிறது!

ராமன் தம்பி என்ற பெருமைதான்

லட்சுமணன் சொன்ன கதை கேட்டு இரத்தக் கண்ணீர் வடித்த குகன் பரதனைக் குறித்து நெடுஞ் சினங் கொண்டான். நேரில் கண்டதும், படையோடு கண்டதும்,—ஆம், அந்தப் பெரும் படையோடு கண்டதும்—சீறினான் பாம்பு போலே, 'அந்த உயிரை இப்போதே வாங்கிவிடுவேன்!' என்று. பரதனுடைய முகத்தையும் மரவுரியையும் கண்ட பின்பு தான், 'அவன் பிழை செய்திருக்கமாட்டான்' என்று கருதலானான்.

அப்போதும் பரதனைக் குகன் உள்ளபடி தெரிந்து கொள்ளவில்லை. "ராமனுக்குப் பின்பிறந்தும் பிழை செய்ய முடியுமா?" என்று, அந்தப் பெருமையையும் பரதனுக்கு அளிக்காமல் ராமனுக்கே அர்ப்பணம் செய்துவிட்டான்.

பேருவகையும் பெருந்திகைப்பும்

எதிரே வந்து முக முகமாய்ச் சந்தித்ததும், வணங்க வேண்டுமென்று உள்ளத்தில் பட்டதும், அப்படியே காலில் விழுந்து வணங்கி

னுன். பரதனும் தன் காலில் விழுந்ததும், 'சக்கரவர்த்தியாகி விட்டதாகவே தான் நம்பிய அவனது பெரும்பணிவு உள்ளத்தை உருக்கி விட்டது. நீண்ட காலம் பிரிந்து போய் மீண்டு வந்த அருமை மகனைக் கண்ணுற்ற தந்தைபோல் தழுவி உச்சிமோந்து முகம் பார்த்துப் பேருவகை அடைந்தான்.

அந்நிலையிலும் "இந்தப் பிள்ளை, பாவம்! ராஜ்யத்திலேயே சுகமாய் இருந்து விடாமல் காட்டிலே அண்ணனைப் பார்த்துப் போகலாம், அன்பு தெரிவிக்கலாம், அனுதாபம் தெரிவிக்கலாம்" என்று வந்திருப்பதாகவே எண்ணினுன். ஆனுல் பரதன் சொன்ன பதில் பெருந் திகைப்பை விளைவித்தது. "தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன், அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்!" என்று பரதன் வந்த செய்தி தெரிவித்ததும், திகைப்பும் வியப்பும் மகிழ்ச்சியும் குகனை அப்படியே பரதன் காலில் விழச் செய்து விட்டன.

புதுமைப் பெருவாழ்வு

ஸ்ரீ ராமனுடைய குணசௌந்தரியத்திலே மோகித்துப் போய், அவனோடு உறவாடப் பெற்றதே குகனுக்கு ஒரு பெருவாழ்வு - புதுவாழ்வு. இப்போது பரதனுடைய குணாதிசயமும் தெரிந்து விட்டது, அதிசயமாகவே - அதிசௌந்தரியமாகவே. கண்ணை மறைத்த மாயை விலகிப் போக, மறுபடியும் ஏதோ ஒரு புதுமைப் பெருவாழ்வு பெற்றவன் போலாகி விட்டான் குகன்.

ஆயிரம் ராமருக்கும் மேம்பானவன் !

"இப்படியும் ஒரு பிறவியுண்டா? மனிதன் தானே, தெய்வப்பிறவில்லையே!" என்ற உணர்ச்சி - வேகத்தில் வார்த்தை புறப்படுகிறது. மெய்ம்மறந்த நிலையிலே:

தாயுரை கொண்டு, தாதை
    உதவிய தரணிதன்னைத்,
தீவினை என்ன நீத்துச்,
    சிந்தனை முகத்தில் தேக்கிப்.
போயினை! என்ற போழ்து
    புகழினோய்! தன்மை கண்டால்.
ஆயிரம் இராமர் நின்கேழ்
    ஆவரோ, தெரியின், அம்மா?

[தாய் உரைகொண்டு-(உன்) தாயாகிய கைகேயி கேட்டுக்கொண்டபடி. தாதை - தந்தை. தரணிதன்னை - ராஜ்யத்தை. தீவினை என்ன நீத்து - கொடிய பாதகத்தை விட்டு விடுவது போலத் தள்ளி விட்டு. தேக்கி - நிறைத்து. போயினை - இங்கு வந்தாய். போழ்து - பொழுது. புகழினோய் - புகழுக்கு எல்லாம் உறைவிடமாக இருப்பவனே. நின்கேழ் - உனக்குச் சமானம். தெரியின் - சீர்தூக்கிப் பார்த்தால். அம்மா - அதிசயக் குறிப்பு.]

தூய்ய வெண் சிகரம்

"தாயாகிய கைகேயி கேட்டுக் கொண்டபடி அவளுக்கு வாக்களித்த ராஜ்யத்தைத் தசரதர் கொடுத்ததில் தான் என்ன தவறு இருக்கமுடியும்?

அது தவறானாலும், இந்தப் பரதன் எப்படி அதற்குப் பொறுப்பாளி? தாயுரை கொண்டு தந்தை கொடுத்த ராஜ்யத்தை ஆளாமல் இந்தப் பிள்ளை இப்படி வந்து விட்டதே! தீவினையைத் தொலைத்துத் தலை முழுகுவது போல், கிடைத்த கிரீடத்தைத் தள்ளித் தொலைத்து விட்டு, இவ்வளவு சிந்தனையையும் முகத்திலே, இப்படித் தேக்கிக் கொண்டு வந்து விட்டாயே, அப்பா! இந்த உன் தன்மையைப் பார்த்தால், ஆலோசித்துப் பார்த்தால், நான் என்னதான் சொல்ல முடியும்?'' என்றெல்லாம் சிந்தனை அலைகளும், உணர்ச்சிச் சுழிகளும் ஆகிவிட்டது குகனுள்ளம்.

“எப்படியும் ராமன் தம்பிதானே, பிழை செய்வானா?'' என்ற [illegible] போய், “அந்த ராமன் தான் இந்தத் தம்பிக்குச் சமானமா?'' என்று தோன்றி விட்டது. அப்படிச் சொன்னாலும் போதாது என்று அலைபடுகிறது உள்ளம். உடனே ஓர் உணர்ச்சிப் பேரலை மீது ஒரு தூய் வெண்மைக் கருத்துச் சிகரம் வெளிப்படுகிறது:

ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ, தெரியின்? அம்மா!

ராமனுக்காக உயிர்த் தியாகம் செய்வதும் இன்பம் என்று [illegible] உவகை யுள்ளம், ராமனுக்காக இந்தப் பரதத் தம்பியின் உயிரையும்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

198. மாற்றெல்லாம் சரிதான்

வேடன் மூழ்கிப் போயிருந்தான், ராமகுலப் பெருமையாகிய குண ஜோதியிலே. அந்தச் சூரிய குல பரம்பரையின் புகழும் பெருமையும் குறித்து எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். தசரத சக்கரவர்த்தி சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக அருமை மகனையும் துறந்தது, முதன் முதல் அநியாயமாகவே தோன்றியது; எனினும் ராமனுடன் சிறிது பழகிய பின்பு அதுவும் தசரதருக்கும் பெரும் புகழாகவே ஒளிவீசத் தொடங்கி விட்டது. 'அத்தகைய பரம்பரை மாலையில் நாயகமணியாகச் சுடர்கின்றது ராமன் புகழ்' என்று எண்ணமிட்டவனாய், அந்த நாயக மணியை அல்லும் பகலும் அனவரதமும் தியானித்த வண்ணமாய் இருந்தான். அந்த மனநிலைதான், ஆரம்பத்தில் பரதனைக் குறித்துத் தீர விசாரியாமலே குகனுக்குப் பெருஞ் சீற்றத்தையும் போர் வெறியையும் மூட்டி விட்டது. இப்போது பரதனுடைய குணாதிசயத்தை 'ஆயிரம் இராமர்'களாகக் கண்டதும் இந்தக் குண ஜோதியிலே மூங்கி முழுகித் திளைக்கலானான்.

'எல்லாம் உன் புகழ்தான்'

இந்த ஆனந்தத்தின் அருவி போல ஒரு வாக்குப் பிரவாகம் புறப்பட்டது. பிறகு, 'கேவலம் வேடனா நான்தானா இவனைப் புகழ்வது?' என்று தோன்றுகிறது. அப்பால் பரத குணாதிசயம் என்ற ஜோதிப் பெருக்கிலே, ராமன் மட்டுமல்ல, ராமனுடைய மூதாதையர்களும் மறைந்து போனதாக ஒரு தோற்றம். இந் நிலையில் மறுபடியும் பேசுகிறான் குகன்:

என்புகழ் கின்ற(து) ஏழை
எயினனேன்? இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை, மற்றை
ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்,

மன்புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்,
உயர்குணத்(து) உரவுத் தோளாய்!

[என் புகழ்கின்றது — எப்படிப் புகழமுடியும். எயினனேன் — வேடனாகிய நான். இரவிதன் — சூரியனது. புகழ்க்கற்றை — கிரணங்களின் தொகை. மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்—சந்திரன், நட்சத்திரங்கள் முதலான ஒளிகளை அடக்கி, அவற்றை இல்லாதன போலச் செய்யும் ரீதியில். மன்புகழ் பெருமை — நிலைபெற்ற புகழ் என்று சொல்லக் கூடிய பெருமை வாய்ந்த. நுங்கள் மரபினோர் — உங்கள் மூதாதையர்களும். உரவுத் தோளாய் — புயவலிமை வாய்ந்தவனே!]

பரதனுடைய புயவலிமையும் அழகும் அந்த 'உயர் குண'த்தின் புறத் தோற்றம் தான் என்று தோன்றுகிறது குகனுக்கு. இத்தகைய உயர் குணப் புகழிலே மூதாதைகளின் பெருமைகளெல்லாம், சூரிய ஒளியில் சந்திர நட்சத்திரங்கள் ஒளியிழந்து ஒடுங்கிப் போவதுபோல், மறைந்து ஒடுங்கிப் போகின்றனவாம்.

'நமது தமையன்'

இத்தகைய வியப்பிலே தன்னை முழுக்க இழந்து நின்ற குகனை நோக்கிப் பரதன் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறான். 'இந்தக் காட்டிலே ராமன் எங்கே தங்கியிருக்கக்கூடும்? அதற்கு வசதி எங்கே? கட்டிலும் மெத்தையும் எப்படிக் கிடைத்திருக்கும்? இல்லாவிட்டால் எப்படித் தூங்கியிருப்பான்?' என்ற கவலை தோன்றிவிட்டது உள்ளத்திலே. ஆனால் 'தமையன் இரவில் எங்கே தங்கினான்?' என்று கேட்க ஆரம்பித்தவன் குகனுடைய உள்ளத்தையும் தொட்டுப் பேசுவதுபோல் 'நமது தமையன் இரவில் எங்கே தங்கினான்?' என்று கேட்டுவிடுகிறான்.

ராமன் குகனைச் சகோதரனாக அங்கீகரித்துக் கொண்டான். சீதையை வேடனுக்குக் கொழுந்தியாகக் காட்டி, அருகேயிருந்த லட்சுமணத் தம்பியையும் வேடச் சகோதரனாக்கி விட்டான். அது மட்டுமா? 'அதோ அயோத்தியில் இருக்கிறான் உன்னுடைய வேறொரு தம்பி' என்று பரதனையும் ஏற்கெனவே தம்பியாக்கி விட்டான். அந்த விவரமெல்லாம் பரதனுக்குத் தெரியாது. எனினும், சுமந்திரன் குகனை ராமனுக்கு 'உயிர்த் துணைவன்' என்று சுட்டிக் காட்டியதும், அந்த உயிர்த்துணைவன் அதிசயமாக அன்பு காட்டியதும் பரதனுடைய உணர்வை உருக்கி உள்ளத்தை வசீகரித்து விட்டன; இந்நிலையில் ராமன் அனுஷ்டித்த சகோதர தர்மத்தைப் பரதனுடைய மேதையும் உறுதிப்படுத்தி விடுகிறது.

'நமது தமையன் இரவில் எங்கே தங்கினான்' என்று ஒரு தம்பி வேறொரு தம்பியைக் கேட்பதுபோல் பரதன் கேட்டதும், குகன் 'இதோ காட்டுகிறேன், வா' என்று உடனே புறப்படுகிறான். குகன் நடையும் பரதன் ஓட்டமுமாய்ப் போகிறார்கள். குகனை எட்டிப் பிடித்துப் போக மட்டுமல்ல, அவனுக்கும் முன்னே போய்ப் பார்த்துவிட வேண்டுமென்று ஆத்திரம் பரதனுக்கு.

என்ன மெத்தை, என்ன தலையணை !

இப்படி ஓடும் பரதன், தானே கண்டு பிடித்து விட்டானும் ராமன் பள்ளி கொண்டிருந்த மெத்தையையும் தலையணைகளையும். எங்கே? எப்படி? நாமும் பரதனோடு ஓடிப் பார்க்கலாம் :

கார்எனக் கடிது சென்றான்,
கல்லிடைப் படுத்த புல்லில்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்,
பார்மிசைப் பதைத்து விழ்ந்தான்,
பருவரல்— பரவை புக்கான்,
வார்மணிப் புனலால் மண்ணை
மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.

[கார் — மேகம். கடிது — விரைந்து. படுத்த — விரித்த, பரப்பிய. வார்சிலை — நீண்ட வில். தடக்கை — பெரிய கை. வள்ளல் — ராமன். வைகிய — தங்கிய, படுத்திருந்த. பள்ளி — படுக்கை. பார்மிசை — அந்த நிலத்தின் மீது. பருவரல், பரவை — துன்பமாகிய கடல். புக்கான் — அமிழ்ந்து போனான். வார்மணிப் புனலால் — முத்துப் போல் நீள வடித்துக் கொண்டிருந்த ... நீரால். மண்ணுநீர் — மெழுகுவதற்கு உரியநீர். ஆட்டும் — (இங்கே) கொட்டுகிற.]



கடுங்காற்று வீசும்போது விரைந்தோடும் மேகம் போல ஓடிப் போனானும் பரதன். குகன் போன திசையில் அவனுக்கும் முன்பே ஆத்திரமாக ஓடிப் போய், அந்த அண்ணன் படுக்கையைக் குகத் தம்பி காட்டாமலே கண்டு பிடித்து விட்டான்.

இரண்டு கற்களுக்கு இடையே பரப்பியிருந்த புல்லைக் கண்டதும் கவனித்தான். ஆள் படுத்திருந்த அடையாளம்

தெரிந்தது. 'அண்ணன் படுத்த மெத்தை அது, தலையணைகள் அவை!' என்று தெரிந்து விட்டது. கோதண்டபாணியான வள்ளல் படுத்திருந்த அந்தப் 'புல்-மெத்தை'யைக் கண்டதும், பதைத்துக் கீழே விழுந்துவிட்டான் பரதன். அந்த நிலத்தின்மீது தான் விழுந்தான்; எனினும் துன்பக் கடலிலேயே வீழ்ந்து மூழ்கிப் போனான் என்கிறான் கவிஞன். அந்த நிலத்தை மெழுகிப் புனிதமாக்குவது போல், முத்து முத்தாய்க் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் பரதனை நாமும் பார்க்கிறோம், கவிஞனுடன். நாமும் அந்த மாசற்ற பெருஞ் சோகத்தால் புனித மடைகிறோம்.

அழகு தூண்டிய அன்புத்துயர்

கேகய நாட்டிலிருந்து புறப்பட்டு வரும்போது ஒரே ஞாபகம்தான் விசேஷமாய்ப் பரதனுக்கு. அண்ணன்மேலிருந்த காதலால் அவனுடைய அழகான வாழ்க்கையைப் பற்றி ஒரே கனவு. ராமன் உரையாடும் அழகு, பிறரை உபசரித்து அருள் கூர்ந்து பணி புரியும் அழகு ஆகியவை மட்டுமல்ல; ராமன் நடக்கும் அழகு, படுத்திருக்கும் அழகு, எல்லா அழகுகளும் பரதன் உள்ளத்தை வசீகரிப்பதுண்டு. அப்படிப்பட்ட உள்ளம், இப்போது இந்தப் புல்லுப் படுக்கையைப் பார்த்ததும் என்ன பாடுபட்டிருக்கும்!

சப்ரமஞ்சக் கட்டிலில் சுகமாய், அழகாய்ப் படுத்திருக்க வேண்டிய மேனி இப்படிக் கல்லிலும் புல்லிலும் படுத்திருந்ததே! —'என்பதைச் சகிக்க முடியவில்லை. அந்த இதயம் கதறுகிறது:

இயன்ற(து)என் பொருட்டி னால்இவ்
 இடர்உனக்(கு) என்ற போழ்தும்;
அயின்றனை கிழங்கும் காயும்
 அமிர்தென : அரிய புல்லில்
துயின்றனை எனவும்; ஆவி
 துறந்திலென், — சுடரும் காசு
குயின்(று)உயர் மகுடம் சூடும்
 செல்வமும் கொள்வன் யானே!

[இயன்றது — நேர்ந்தது. இடர் — துன்பம். அயின்றனை — தின்றாய். அமிர்தென — அமிர்தம்போல். அரிய புல்லில் — உறங்குவதற்குக் கஷ்டமான புல்லில். ஆவி துறந்திலென் — உயிரை விடவில்லை. சுடரும் காசு — சுடர் வீசும் ரத்தினங்கள். குயின்று — பதிக்கப் பெற்று.]

'ராமனுக்கு வந்த இந்த இடரெல்லாம் பாவியாகிய என் பொருட்டினால் தானே!' என்று எண்ணுகிறான் பரதன். காட்டுக் கிழங்கையும் காய்களையும் அமிர்தமாகச் சாப்பிட்டானாம் ராமன்; அவ்வளவு பசித் தீ, காட்டுத் தீயைப் போலே. இந்தப் புல்லு மெத்தையிலும் உறங்கி விட்டானாம்; அத்தனை தூரம் வழி நடந்த களைப்பு. 'இவ்வளவும் தெரிந்தும் நான் உயிரை விடவில்லையே!' என்று மனம் புழுங்குகிறான் பரதன்.

அந்தப் புழுக்கத்திலே தன்னைத் தானே பரிகசித்துச் சிரித்து, 'அந்த மகுடத்தையும் நான் சூட்டிக்கொள்ளத்தான் போகிறேன்; அந்த அரசுச் செல்வத்தையும் ஆளத்தான் போகிறேன்!' என்று நொந்து கொள்கிறான்.

'காசா, லேசா?' என்று நாம் சாதாரணமாய்ச் சொல்லுகிறோமல்லவா? அந்த மாதிரியாகப் பரதனும் 'அது என்ன? சாதாரணக் கிரீடமா? சுடரும் காசுகள் (இரத்தினங்கள்) பதித்த கிரீடமல்லவா?' என்கிறான். குகன் என்ற உரைகல்லில் உரைத்துக்கொண்ட தங்கத்தின் மாற்றெல்லாம் சரிதானே?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

199. சகோதர சம்பத்து

"ராமனும் சீதையும் இந்தப் புல்லு மெத்தையில்தான் படுத்திருக்க வேண்டும், அடையாளம் தெரிகிறதே; ஐயோ! என் பொருட்டினால் அல்லவா இத்தகைய துன்பம் நேர்ந்தது? காயும் கிழங்கும் அவர்களுக்கு அமிர்தமாயின; உறுத்தும் புல்லிலும் உறக்கம் வந்தது; எனினும் இவற்றையெல்லாம் அறிந்த எனக்கு இன்னும் உயிர் போகவில்லை; இனிமேல் திரும்பிப்போய் அந்தக் கிரீடத்தையும் அழகாய் அணிந்துகொண்டு சுகமாக ராஜபோகங்களையும் அனுபவிக்க வேண்டியது தான்!" என்றெல்லாம் தன்னைத் தானே வெறுத்து, குகன் இருப்பதையும் மறந்து, தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்த பரதனுக்குக் கொஞ்ச நேரத்தில் அருகேயிருந்த குகன் ஞாபகம் வந்தது. ராமனை நிழல் போல் தொடர்ந்து போன லட்சுமணன் ஞாபகமும் வந்தது.

லட்சுமணன் எங்கே உறங்கினான்?

இந்த வேடத் தலைவனிடம், அந்தத் தம்பியைக் குறித்தும் விசாரிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. "ராமனுடன் இருப்பானே, அவன் இராப்பொழுது கழித்தது எவ்விடத்திலே?" என்று மெள்ளக் கேட்கிறான் பரதன். 'மன்னன்' கிடந்துறங்கிய முரட்டுப் படுக்கையைப் பார்த்த கண்கள், இளவரசு பள்ளி கொண்டிருந்த 'வைபவ'த்தையும் பார்க்க விரும்புகின்றன:

தான்தர நிவந்த தோளான்
　　பின்னரும் சொல்லு வான்,'அந்
நீண்டவன் துயின்ற சூழல்
　　இதுஎனில்,—நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே
　　போந்தவன், பொழுது நீந்த(து)
யாண்(டு)?'என இனிது கேட்டான், —
　　எயினர்கோன் இதனைச் சொன்னான்.

[தூண்தா நிவந்த — தூண்போல் உயர்ந்த. தோளான் — தோள் களை உடைய பரதன். நீண்டவன் — ராமன். துயின்ற — படுத்துறங்கிய. சூழல் — இடம். நிமிர்ந்த நேயம் — அதிக நேசம். பூண்டவன் — பூண்ட வனும். தொடர்ந்து பின்னே போந்தவன் — பின்தொடர்ந்து வந்த வனுமாகிய லட்சுமணன். பொழுது — இராப்பொழுது. நீத்தது யாண்டு — எங்கிருந்து கழித்தானோ. எயினர் கோன் — தலைவனான குகன்.]

கண் மூட வில்லையே

பரதன் கேட்ட கேள்விக்கு, 'முரட்டுச் சுபாவம் உள்ளவர்கள்" என்று கருதத்தக்க வேடர்களின் தலைவன் என்ன பதில் சொன்னான்? "லட்சுமணன் எங்கே உறங்கினான்?" என்ற கேள்விக்கு, "லட்சுமணன் உறங்கவே இல்லை" என்கிறான்.

ராமன் அந்தப் புல்லுப் படுக்கையில் எப்படியோ உறங்கி விட்டான் என்ற பரதனுடைய ஊகத்தையும் உறுதிப் படுத்துகிறான். சீதையும் உறங்கி விட்டாள் என்பதையும் சொல்லி, "லட்சுமணனைக் குறித்துச் சொல்லுகிறேன் கேள்" என்று அவனுடைய நிலையைத் தான் மனப்பாடமாய்ப் பிடித்து வைத்திருந்தபடி வெளி யிடுகிறான்;

'அல்லைஆண்(டு) அமைந்த மேனி
அழகனும், அவளும் துஞ்ச,
வில்லைஊன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்,—
கல்லைஆண்(டு) உயர்ந்த தோளாய்!
கண்கள்நீர் சொரியக், கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்,
இமைப்பிலன் நயனம்' என்றான்.

[அல்லை ஆண்டு அமைந்த மேனி—இருளைக் கையாண்டு கனிவித்து அமைத்ததோ என்னும்படியாகக் கருநீலமாய் அமைந்த திருமேனி அழகனும்—ராமனும். அவளும்-(இங்கே) அவனது அழகுக்கு ஒத்த சீதையும். துஞ்ச—தூங்க. வெய்துயிர்ப் போடும் — வெப்பமான பெருமூச்சோடும். வீரன்—லட்சுமணன். கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய் — கல்லே போல் திண்மை வாய்ந்த நெடுந்தோளுடைய பரதனே (கேட்பாயாக). கங்குல்— இரவின். எல்லை—எல்லையாகிய விடியற்காலம். இமைப்பிலன் நயனம் — இமைக்கவில்லை கண்கள்.]

"எண்ணெய் உண்ட இருள் புரை மேனியான்" என்று வருணிக்கப் பெற்ற குகன், ராமனுடைய வசீகரமான கருநீல நிறமும் தன்னோடும் தன் வகுப்போடும் உரிமையுடன் உறவாடுவது போன்ற ஒரு பிரமை யடைந்திருக்கிறான் என்று ஊகிக்கலாம்; அப்படி அமைந்திருக்கிறது "அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்" என்று சொல்லும் அழகு. ராமன் அழகை 'இருளின் கனி' என்று கருதுவதில் குகனுக்கு விசேஷ திருப்தி.

"அந்த அழகனும், அந்த அழகனுக்கு ஏற்ற அழகியும் களைப்பினால் உறங்கிப் போனார்கள், அந்தக் கரடுமுரடான படுக்கையிலே; ஆனால் அவர்களுடைய அந்தப் பரிதாப நிலையை நோக்கிக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தான் லட்சுமணன். அவனுக்கு எப்படி உறக்கம் வந்திருக்கும்?" என்று சொல்ல வந்த குகன், வில்லை ஊன்றிய அந்தக் கையையும்,

அந்த வீரனுடைய உஷ்ணமான பெருமூச்சையும்கூடப் பிரத்தியட்சமாக்கி விடுகிறான் பரதனுக்கு.

லட்சுமணனை அப்படிப் பிரத்தியட்சமாக்கிக்கொண்டே பரதனை நோக்குகிறான்,—'இப்படியும் ஒரு சகோதர சம்பத்தா ?' என்று வியப்பது போல. பரதனுடைய குண அழகில் ஈடுபட்டது போல் இந்தத் தோளின் ஆற்றலிலும் அழகிலும் ஈடுபட்டவனாய், "பரதா! கேட்பாயாக" என்று சொல்லி, "கண்ணீர் சொரிந்து கொண்டே இரவின் எல்லை கண்டான் லட்சுமணன் ; விடியற்காலம் வரை அப்படியே நின்று கொண்டிருந்தான். கண் மூடவில்லை ஒரு கணமும்" என்கிறான். அப்படியே தானும் கண் விழித்துப் பார்த்துக்கொண்டிருந்த சாட்சி அல்லவா ?


அவனும் தம்பி, நானும் தம்பியா ?

லட்சுமணனுடைய அந்த நிலையைக் குகன் வாயிலாகப் பார்த்து விட்ட பரதன், 'அதுதான் சகோதர வாஞ்சை' என்று வியந்து வியந்து பெருந்துயரமும் பேரவமானமும் அடைந்தான். இவையெல்லாம் சேர்ந்து பொங்கிய உணர்ச்சி – அலை அந்த வாக்கிலே வெளிப்படுவதை நாமும் பார்த்து வியக்கிறோம் ; அந்தத் துயரத்திலும் பங்கு கொண்டு புனிதராகிறோம் :

என்பத்தைக் கேட்ட மைந்தன்,
'இராமனுக்(கு) இளையார் என்று
முன்(பு)ஒத்த தோற்றத் தேமில்
யான்என்றும் முடிவி லாத
துன்பத்துக்(கு) ஏது ஆனேன்,
அவன்அது துடைக்க நின்றான்,
அன்பத்துக்(கு) எல்லை உண்டே?
அழகி(து)என் அடிமை!' என்றான்.

[என்பத்தை – என்பதை ; என்று குகன் சொன்னதை. மைந்தன்—பரதன். முன்பு ஒத்த தோற்றத் தேமில் –தம்பிகள்





என்று ஒத்தவரா கப் பிறந்த எங்க ளில். அவன் — லட் சுமணன். அன்பத்துக்கு—அன்பு என்னும் தத்துவத்திற்கு. உண் டே — உண்டோ.]

"ராமனுக்குத் தம்பிகளாய்ப் பிறந்தோம் நானும் லட்சுமணனும். தம்பி என்ற முறையில் நானும் லட்சு மணனை ஒத்திருப்பவன் தானே? எனினும் ராமனது முடிவில்லாத துன்பத்திற்குக் காரணம் நான்" என்று தன்னைத் தானே நொந்து கொள்கிறான். "அவனோ ராமனுக்கு என்னால் ஏற்பட்ட துன்பத்தைக் குறைப்பதற்காக எப்படிப் பட்ட தியாகங்களைச் செய்கிறான்!" என்று தன்னை நொந்துகொண்டே லட்சுமணனுடைய அளவில்லாத அன்பையும் தியாகத்தையும் வியந்து பேசுகிறான்.

பாட்டைப் பாடிப் பார்த்தால், பரதனுடைய துயரமும் அவமான உணர்ச்சியும் வியப்பும், அந்தத் தங்கமான பெருங் குணமும் நம்மையும் தொத்திக் கொள்ளுமோ என்று தோன்றுகிறது. கவியின் தாளக் கட்டு டன் அமைந்த ஓசை—நயம் அதிசயமாய்ப் பரதனுடைய ஹிருதயத்தைத் தொட்டுக் காட்டுகிறது.

பரதனும் பாராட்டாத தியாகம்

சிரி: லட்சுமணத் தம்பியின் தியாக புத்தியை, அன்புப் பாசத்தை இவ்வளவு தூரம் வியந்து பாராட்டினானே பரதன், ஆனால் அத்தகைய உற வில்லாத குகனும் அப்படிக் கண் விழித்துக் காவல் செய்து அன்பைக் கண்ணீராய்ப் பொழிந்ததைக் குணப் பெருங் கடலான பரதன் பாராட்டி னானா? இல்லை, குகன் தியாகத்தைப் பாராட்டுவோரில்லை. லட்சுமணனா வது வில்லும் கையுமாக நின்றான்; அவனைக் காட்டிலும் ஜாக்கிரதையாக

அம்பு தொடுத்த வில்லும் கையுமாக உருகி நின்ற குகனும் விடியற் காலம் வரையில் கண் மூடாமல் இருந்து தானே லட்சுமணனுடைய நிலையைக் கண்டு சொல்லுகிறான் ?

ஆனால் தான் அப்படி விழித்துக் காவல் செய்ததைக் குகன் பரதனிடம் சொல்லவேயில்லையென்பது கவனிக்கத் தக்கது. தான் ராமனுக்குச் செய்த தியாகம் அவ்வளவு இயற்கையாகத் தோன்றியது- மூச்சு விடுவது போலே. லட்சுமணனுடைய தியாகம் தான் பிரமாதப்படுகிறது குகனுள்ளத்திலே.

பரதனும் கேட்க வில்லை, குகனும் சொல்ல வில்லை — இத்தகைய சகோதர சம்பத்திற்குப் பாராட்டும் வேண்டுமா? இதைக் கம்பனும் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறான் ; காட்டி, நம்மை வியப்பிலும் ஆனந்தத்திலும் மூழ்கச் செய்து விடுகிறான்.

பரதன், ராமன் படுத்திருந்த இடத்தைப் பார்த்து விட்டான் ; லட்சுமணன் இரவெல்லாம் ஒரே விழிப்பாய் அருகே காத்து நின்ற அந்த இடத்தையும் பார்த்து விட்டான். துன்பம் முதலான உணர்ச்சி-அலைகளுக் கிடையே முங்கி முழுகிக் கடையேறிய பரதன் அன்றிரவில் அந்தப் புல்லிலும் புழுதியிலும் படுத்திருந்தான்.



பி. ஸ்ரீ.

200. தோணியில் நடந்தது

பொழுது புலர்ந்தபின், பரதன் கங்கையாற்றைக் கடந்து ராமன் இருக்குமிடம் செல்ல விரும்பினான். குகனுடைய கட்டளையால் பல தோணிகள் வந்தன. அந்தத் தோணிகளில் ஏறிச் சேனைகளும் மற்ற அயோத்தி மக்களும் கங்கையைக் கடந்து விட்டார்கள். ஒரு தோணியில் பரதன் ஏறிக்கொண்டான்; தன்னுடன் தம்பி சத்துருக்கனனையும் தாய்மாரையும் சுமந்திரனையும் ஏற்றிக் கொண்டான். குகனையும் தன்னுடன் தோணியில் ஏறச் செய்தான்.

தோணியிலும் நடந்தான்!

தோணி நகர்கிறது; துடுப்புகள் தள்ளுகின்றன. பரதன் தோணியில் தான் போகிறான். எனினும் "தோணி மூலமாகவும் நடந்தான் பரதன்!" என்று சொல்ல ஆசைப்படுகிறது கவிஞன் உள்ளம். ஏன், எப்படி?

நுன்னன தம்பியும்,
    தாயர் மூவரும்,
சொன்னதேர் வலவனும்,
    தூய தோழனும்,
துன்னினர் ஏறலும்,
    துழாது டுப்பெனும்
நன்னயக் காலினால்
    நடத்தல் மேயினான்!

[தன்னன — தன்னைப் போன்ற. தேர் வலவன் — தேர் ஓட்டுதலில் வல்லவனான சுமந்திரன். தூய தோழன் — குகன். துன்னினர் ஏறலும் — நெருக்கிக்கொண்டு படகில் ஏறவும். துழா துடுப்பு எனும் — துழாவுகின்ற துடுப்பாகிய. நடத்தல் மேயினான் — நடந்தான்.]

பல்லக்கு குதிரை, யானை முதலான ஊர்திகளெல்லாம் உடன் வந்தாலும் தான் நடந்தே வந்தான் பரதன். "அந்த அருமையான கால்கள் — அந்த நல்ல கால்கள் நோகுமே — எவ்வளவு நொந்து போயிருக்கும்!" என்ற நினைவு கவிஞன் உள்ளத்தை விட்டுப் போகமாட்டேன் என்கிறது; அந்தக் கால்களும் கண்ணைவிட்டுப் போகமாட்டோம் என்கின்றன. தோணித் துடுப்பாகிய கால்களால் கங்கை வெள்ளத்திலும் பரதன் என்ற சகோதர சம்பத்து நடந்தது போவதாகவே ஓர் உணர்ச்சி, ஒரு பிரமை கவிஞனுக்கு. பரதன் நடந்து கொண்டே யிருக்கிறான் ராமனை நோக்கி — கவிஞன் கண்ணுக்கு எதிரே.......

தோணி பெரியது, விசாலமானது. அதைப் படகு என்றே சொல்லலாம். கங்கையில் மெள்ளச் சென்று கொண்டிருக்கிறது. அருகே தோணிகளில் சுற்றத்தாரும் முனிவர் முதலான பெரியவர்களும் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் வயது முதிர்ந்த ஒரு பெண் மணியை அடிக்கடி பக்தியுடன் தொழுகிறார்களாம்.

அந்தக் கம்பீரமான — தொழத் தக்க — தோற்றத்தைக் கண்டு குகனும் அம்மாளைத் தொழுது நின்று பரதனை நோக்கி, "அந்தத் தேவி யாரோ?" என்று கேட்கிறான். குகன் கண்களில் அந்த அம்மணி, முனிவர்கள் மட்டுமல்ல, தேவர்களும் தொழத்தக்க பெரியாளாகத் தோன்றுகிறாள்.

துறந்த பெரியாள்

குகன் கேள்வியும் பரதன் விடையும் பின்வரும் பாட்டில் எவ்வளவு அருமையாகச் சித்திரிக்கப் படுகின்றன :—

சுற்றத்தார் தேவரொடும்
தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கி,
'வெற்றித்தார்க் குரிசில்! இவர்
யார்?' என்று குகன்வினவ, —
'வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி
மூன்றுலகும் ஈன்றானை
முன்ஈன் றானைப்
பெற்றதனால் பெருஞ்செல்வம்
யான்பிறந்த லால்துறந்த
பெரியாள்' என்றான்.

[வெற்றித்தார்க் குரிசில் — வெற்றிமாலையணிந்த பரதமன்னனே! வேந்தர் வைகும் — சிற்றரசர்கள் காத்திருக்கும். முற்றத்தான் - தலைவாசலையுடைய தசரத சக்கரவர்த்தி. மூன்றுலகும் ஈன்றானை - பூமி, வானம், பாதாளம் என்ற மூன்று உலகங்களையும் படைத்தவனாகிய பிரம்ம


தேவனை. முன் ஈன்றானை - முன்பு படைத்த திருமாலின் அவதாரமாகிய ராமனை. பெற்றத்தால் - பெற்றதால் ஆகிய.]

பரதனைக் குகன் 'வெற்றித்தார்க் குரிசில்' என்று அழைப்பதே நம்மைச் சிந்திக்க வைக்கிறது. பரதனைப் படையோடு கண்டதும் குகன் சீறிச் சினந்து போராடி அதம் செய்துவிட வேண்டுமென்று வீரவாதம் செய்தானல்லவா? அந்த 'நடைபெறாத' போரில் ஒரு துளி ரத்தம் சிந்தாமல் பரதன் வெற்றி பெற்றுவிட்டான் என்பது குறிப்பு. அந்த வெற்றி மாலையை இப்போது சொல்மாலையாகக் குகன் பரதனுக்கு அணிவதாய் ஊகிப்பது மிகை யாகாது.

இப்படிப் பரதனுடைய குணாதிசயத்திற்குத் தோற்ற குகன், கோசலையின் தொழத்தக்க முக காம்பீர்யத்தையும் பயபக்தியுடன் நோக்குகிறான். சாமானியர் அல்லாத, உயர்வுபெற்ற பெரியார் ஒருவரைத் தெரிந்து கொள்ள விரும்புவோர் பளிச்சென்று அவரைக் கைநீட்டிச் சுட்டிக்காட்டி "இவர் யார்?" அல்லது "நீர் யார்?" என்று கேட்பது சரியன்று, லௌகிக சம்பிரதாயமும் அன்று. அத்தகாத முறையை இக்காட்டு மனிதனுடைய மனப்பண்பும் கைவிடுகிறது. கோசலையைக் கை நீட்டிச் சுட்டிக் காட்டாது, கைகூப்பி நோக்குதலால் சுட்டிக்காட்டிப் பிறகு பரதனை நோக்கி, "இவர் யார்?" என்று கேட்கத் துணிகிறான் குகன்.

பரதனிடமும் கோசலையிடமும் இப்படியெல்லாம் வெகு விநயமாய் அதி உசிதமாய் நடந்து கொள்ளத் தெரிகிறது கிராதர்கோனுக்கும்; பக்திக் காதலாலும் நட்புக் காதலாலும் 'ஓதாதுணர்ந்த உயர்ஞான'மாகப் பண்பாடு பிறந்து விடுகிறதாம்.

பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகப் படுத்துகையில், 'இவள் தசரதர் தேவி — சக்கரவர்த்தியின் பட்டமகிஷி' என்று முதலில் கூறுகிறான். இந்தப் பெருமையைக் காட்டிலும் அதிகமான பெருமையாக, "ராமன் தாய்" என்கிறான்.



இந்த விடைகளை இவ்வாறு பளிச்சென்று கூறி விடாமல் தசரதனை "வேந்தர் வைகும் முற்றத்தான்" என்று சிறப்பிக்கிறான். சக்ரவர்த்தியைப் பேட்டி காணச் சமயம் கிடைக்காமல் அரசர்கள் தலைவாசலில் காத்து நிற்கிறார்களாம்; அந்த முற்றத்தில் பல நாளாகத் தங்கவும் வேண்டியிருக்குமாம் பேட்டி கிடைப்பதற்கு முன். அத்தகைய சக்ரவர்த்தியின் "முதல் தேவி" (பட்டமகிஷி) என்று மேம்படுத்திப் பேசுகிறான் கோசலை அம்மையை.

பிறகு "ராமன் தாய்" என்று சொல்ல வந்தவன், "படைப்புக் கடவுளையும் ஈன்றெடுத்த ரட்சகமூர்த்தியின் அவதாரமான லோகரட்சகன்" என்று ராமனைக் குறிப்பிட்டு, அந்த "உலக ரட்சகனை உலகத்திற்கு அளித்த பெரியாள்" என்று மேலும் மேம்படுத்த விரும்புகிறான் கோசலையின் பெருஞ்சிறப்பை. ஆனால் பரதனுடைய உணர்ச்சி—வெள்ளம் அதற்கும் அப்பால் பொங்கி விடுகிறது.

ராமனைப் பெற்ற பெருஞ் செல்வமாகிய உடைமைக்கு 'முதலாளி'யாக மட்டும் இல்லையாம் கோசலை. அந்த உடைமையைக் காட்டிலும் அப் பெருஞ் செல்வத்தைத் துறந்த பெருமை அவளுக்கு உரியது என்கிறான் பரதன். 'பெருகிய செல்வ'ரைக் காட்டிலும் 'துறந்த செல்வ'ரைப் போற்றுவது இந் நாட்டின் மேதையல்லவா?

இப்படிக் கோசலையின் துறவுப் பெருமையை, தியாகப் பெருமையை வெளியிட எண்ணிய பரதன், ராமனைப் பெற்ற "பெருஞ் செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள்" என்றே சொல்லி விடுகிறான், பட்டமகிஷி யென்ற பெருமைக்கும் மேலாக ராமனைப் பெற்ற புத்திர சம்பத்தைக் குறிப்பிட்டு, அதற்கும் மேலாக அப்பேர்ப்பட்ட புத்திர சம்பத்தைத் தியாகம் செய்த பெருமையை வற்புறுத்தி, அவற்றுக் கெல்லாம் சிகரமாக, "இப்பெரியவளுக்கு இவ்விதமான பெருமையும் கிடைத்து விட்டது பாவியாகிய நான் பிறந்ததால்!" என்கிறான். கோசலா தேவிக்கு முன் இருந்த இன்ப நிலையும் இப்போதுள்ள துன்ப நிலையும் ஆகிய மூரண்பாடு புண் செய்துவிட்டது பொன்னனை நெஞ்சை: அந்த நெஞ்சின் புலம்பல் இது.